தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

16.12.2012 P.M

17.12.2012 A.M

## 18-ல் விவசாயிகள் , மின்நுகர்வோர் குறைதீர் கூட்டம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகத்தின் பள்ளிகொண்டா கோட்டத்தின் சார்பில் விவசாயிகள் மற்றும் மின்நுகர்வோர் குறைதீர்வு நாள் கூட்டம் டிசம்பர் 18ஆம் தேதி (செவ்வாய்கிழமை) காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது என செயற்பொறியாளர் த. ராசேந்திரன் தெரிவித்துள்ளார்.

## பயிர்க் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்

போதிய மழை இல்லாமலும், மின்வெட்டு பிரச்னையாலும் விவசாயம் செய்ய முடியாமல் தவிக்கும் விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று திருவண்ணாமலையில் நடைபெற்ற விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 28-வது மாநில மாநாடு சனிக்கிழமை திருவண்ணாமலையில் தொடங்கியது. இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 16) நடைபெற்ற மாநாட்டில் விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் வரதராஜன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசினார்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், தமிழகத்துக்கு கர்நாடக அணையில் இருந்து தண்ணீர் திறக்காததால் நாகை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் மட்டும் 14 லட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் கருகிவிட்டன.

எனவே, உடனே 12 டிஎம்சி தண்ணீரைத் திறக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற உத்தரவை கர்நாடக அரசு அமல்படுத்த வேண்டும்.

விவசாயம் பாதிக்கப்பட்டதால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்ட தமிழக விவசாயிகளின் குடும்பத்துக்கு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். காவிரி பாசனப்

பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரமும், வேலை இழந்து தவிக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.10 ஆயிரமும் தமிழக அரசு இழப்பீடாக வழங்க வேண்டும்.

போதிய மழை இன்றி தவிக்கும் நிலையில், இருக்கும் சிறிதளவு தண்ணீரையும் பாய்ச்சி விவசாயம் செய்யப் போதிய மின்சாரம் இன்றி விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

எனவே, தமிழக விவசாயிகள் வாங்கியுள்ள பயிர்க் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

தமிழகத்தின் பற்றாக்குறையான 4 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை, மத்திய அரசு வழங்க வேண்டும். விவசாயம், தொழிற்சாலைகளுக்கு டீசல் மானியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் பங்கேற்றனர்.

## விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வலியுறுத்தல்

விண்ணப்பித் விவசாயத் தொழிலாளர்களுக்கு தாமதமின்றி ஓய்வூதியம் வழங்க வேண்டும் என தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கரூர் மாவட்டம், க.பரமத்தியில் அண்மையில் நடைபெற்ற இச்சங்கத்தின் மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டத்தில்;

மத்திய தொழிற்சங்கங்கள் அறிவிப்பின்படி டிச.18-ல் நடைபெற உள்ள மறியல் போராட்டத்தில் கலந்து கொள்வது, தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.132 ஊதியத்தை வழங்க வேண்டும். நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். விலையில்லா அரிசியை தரமானதாக வழங்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கள் வசிக்கும் பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சிறப்பு நிதி ஒதுக்கி சீரமைக்க வேண்டும்.

குடியிருப்போருக்கு பட்டா, குடியிருக்க வீட்டுமனை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, மார்ச் 3-ம் தேதி கோட்டையை நோக்கி நடைபெற உள்ள பேரணியில் கரூர் மாவட்டத்தில் இருந்து 1,000 பேர் கலந்து கொள்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டத் தலைவர் கே. குப்புசாமி தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் வி.பி. பழனிசாமி, மாவட்ட நிர்வாகிகள் வி.கே. வீராச்சாமி, கே. செல்வம், என். தங்கராஜ், என்.

எலச்சிமுத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலர் ஆர். கருப்பையன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## வறட்சிப் பகுதிகளில் தெளிப்பு நீர் செயல் விளக்கம்

ஆலங்குடி பகுதியில் வறட்சியால் கருகும் நெல்பயிர்களைக் காக்க விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் செயல் விளக்கம் வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

அறந்தாங்கி அருகேயுள்ள ஏகபெருமாளூர் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, வம்பன் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் க. வைரவன் தலைமை வகித்துப் பேசியது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மானாவாரி மற்றும் காவிரி நேரடி நெல் விதைப்பு செய்த நெற்பயிர்கள் 70 முதல் 90 நாட்கள் வயதிலுள்ளன. ஆனால், போதியளவு மழை, ஆற்று நீர் இன்மையால் அவை காய்ந்துவிடும் நிலையில் உள்ளன.

இத்தருணத்தில், நெற்பயிர்களைக் காப்பாற்றிட ஈரப்பதம் இருக்கும் வயல்களில் ஒரு சத பொட்டாசியம் குளோரைடு தெளித்தல் மற்றும் ஈரப்பதமின்றியுள்ள வயல்களில் மினி நடமாடும் தெளிப்பான் கொண்டு நீர் தெளித்தல் போன்ற தொழில்நுட்பங்கள் விளக்கப்பட்டன. பின்னர், 155 ஏக்கரில் பொட்டாசியம் குளோரைடு ஒரு சதம் தெளித்திட தேவையான இடுபொருள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2 மினி நடமாடும் தெளிப்பான்களும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையத் தலைவர் சே. கீதா மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர்.

## அரிமளத்தில் முன்பருவ முனைப்பு இயக்க முகாம்

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளத்தில் ஆத்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டம் மூலம் முன்பருவ முனைப்பு இயக்க முகாம் தொடக்க விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமில், வேளாண் துறை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை, வணிகத் துறை, வேளாண் பொறியியல், விதை சான்றளிப்பு, பட்டு வளர்ச்சி, கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு துறைகள் சார்பில் கருத்துக் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.

நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவுக்கு வேளாண் இணை இயக்குநர் (பொ) பி. எம்பெருமாள் தலைமை வகித்தார். அறந்தாங்கி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் மு. ராஜநாயகம் முன்னிலை வகித்தார்.

திருமயம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பி.கே. வைரமுத்து, பொன்னமராவதி, அரிமளம், திருமயம் ஆகிய வட்டார விவசாயிகள் சுமார் 80 பேருக்கு ரூ. 3 லட்சம் மதிப்பிலான வேளாண் இடுபொருள்கள், கைத்தெளிப்பான், விசைத்தெளிப்பான் உள்ளிட்ட நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றியக் குழுத் தலைவர்கள் அரிமளம் எம்.எம். கணேசன், பொன்னமராவதி சி. அழகுசுப்பையா, திருமயம் பி. முத்துச்சாமி, துணைத் தலைவர்கள் மீனாள் முருகப்பன், அழ. ராமு, ஆத்மா விவசாயிகள் குழு தலைவர்கள் பழ. சண்முகம், அ. முருகன், காசி. கண்ணப்பன் உள்ளிட்டோர் பேசினர்.

முன்னதாக அரிமளம் வேளாண் உதவி இயக்குநர் பெ. உதயகுமார் வரவேற்றார். பொன்னமராவதி வேளாண் உதவி இயக்குநர் பி. கந்தசாமி நன்றி கூறினார்.

**"தில்லியில் சில இடங்களில் இன்று மழை பெய்யக்கூடும்**

தலைநகரில் சில இடங்களில் திங்கள்கிழமை (டிசம்பர் 17) மழைபெய்யக் கூடும்' என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலையில் ஓரிரு இடங்களில் லேசான தூறலுடன் மழை இருந்தது. பகலில் குளுமையான தட்பவெப்பம் நிலவியது. வானம் தெளிவாக காணப்பட்டது. காலை வேளையில் பனிமூட்டம் இருந்தாலும் பின்னர் சூரிய வெளிச்சத்துடன் வானம் காணப்பட்டது. நகரில் ஞாயிற்றுக்கிழமை அதிகபட்ச வெப்பநிலை சராசரிக்கும் மேலே ஒரு டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்பட்டது.

வெப்பநிலை 23.5 டிகிரி செல்சியஸô்க இருந்தது. குறைந்தபட்ச வெப்ப நிலை சராசரிக்கு மேலே 6 டிகிரி அதிகரித்து 14.1 டிகிரி செல்சியஸô்க இருந்தது. அதிகாலை 0.2 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

"நகரில் திங்கள்கிழமை (டிச. 17) வானம், பகுதி மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் மழை வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. வானம் தெளிவாக காணப்படும். திங்கள்கிழமை காலை மூடுபனி இருக்கும்.

அதிகபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸô்கவும், குறைந்தபட்ச வெப்பநிலை 12 டிகிரி செல்சியஸô்கவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்று வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**டெக்ஸ்டைல் டையிங் , பிரிண்டிங் பயிற்சி**

டெக்ஸ்டைல் டையிங் மற்றும் பிரிண்டிங் பயிற்சி டிசம்பர் 19 முதல் 21ம் தேதி வரை நடைபெற உள்ளது என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சாதாரண மக்கள் பயன் பெறும் வகையில் டெக்ஸ்டைல் டையிங் மற்றும் பிரிண்டிங் பயிற்சி டிசம்பர் 19 முதல் 21ம் தேதி வரை மூன்று நாட்கள் நடை பெற உள்ளது.

இந்தப் பயிற்சியில் டையிங், பருத்தி மற்றும் பட்டுத் துணியில் சாயமேற்றுதல், டெக்ஸ்டைல் ஸ்கிரீன் பிரிண்டிங், மல்டி கலர் பிரிண்டிங், உட்பிளாக் மற்றும் விதவிதமான பிரிண்டிங் வகைகள் கற்றுத் தரப்படும்.

காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி பற்றிய குறிப்பேடு, கையேடு, மதிய உணவு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

இதற்கான பயிற்சிக் கட்டணம் ரூ. 1500. பயிற்சி பெற விரும்புபவர்கள் பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், யு-30, 10வது தெரு, அண்ணாநகர், சென்னை- 40. தொலைபேசி எண்- 044-26263484. இந்த முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16tn dec 2012 P.M

**பப்பாளி , செண்பக நாற்றுகள் கட்டிங் முறையில் உற்பத்தி**

மேட்டுப்பாளையம் ஈடன் நர்சரி கார்டனில் பப்பாளி மற்றும் செண்பக நாற்றுகளை கட்டிங் முறையில் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளனர்.

÷கட்டிங் முறையில் நாற்று உற்பத்தி குறித்து இந்த நர்சரி நிர்வாகிகள் எஸ்.ராஜரத்தினம், ஏ.அப்துல் கபார் கூறியது:

÷வழக்கமாக செண்பக நாற்றுகள் விதை மற்றும் ஒட்டு கட்டும் முறையிலும், பப்பாளி நாற்றுகள் விதைகள் மூலமாக மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் நீண்ட நாள் ஆய்விற்கு

பின்னர், இவ்விரு நாற்றுகளையும் கட்டிங் முறையில் உற்பத்தி செய்யும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி உள்ளோம்.

கட்டிங் முறை: நன்கு விளைச்சலைத் தரும் உயர்ரக தாய்ச் செடியில் துளிர்க்கும் கிளைகளை எடுத்து பக்குவப்படுத்தி அவற்றை பனிக்கூடாரம் மற்றும் நிழல்வலை கூடாரத்தில் வைத்து வேர்களை உருவாக்கி, அதன்மூலம் நாற்றுகளை உற்பத்தி செய்வதே கட்டிங் முறையாகும். இந்த தொழில்நுட்பம் மூலம் அதிக விளைச்சலைத் தரும் தாய்ச்செடிக்கு

இணையான தரமான நாற்றுகளை உற்பத்தி செய்து, குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு வழங்க முடியும்.

தற்போது மேட்டுப்பாளையம் மற்றும் தேரம்பாளையத்தில் இயங்கி வரும் எங்கள் நர்சரியில் 30 வகையான மரம், பழம், மலர் வகை நாற்றுகளையும், சுற்றுச்சூழலை பசுமையாக்கும் நோக்கத்தில் விழாக்களில் வழங்கப்படும் நாற்றுகளையும் அதிகளவில் உற்பத்தி செய்வதாகத் தெரிவித்தனர்.

÷இலைகள் மற்றும் கட்டிங் முறையில் நாற்று உற்பத்தி குறித்து வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மரவளர்ப்புத் துறை தலைவர் கே.டி.பார்த்திபன் கூறியது:

முளைப்புத் திறன் குறைவாக உள்ள பழம் மற்றும் மர வகைகளிலும், மலட்டு தன்மை உள்ள மர வகைகளிலும் தண்டுகள் (கட்டிங் முறை), ஒட்டு கட்டுதல், பதியன் மற்றும் திசு வளர்ப்பு மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. ஆனால் இலைகள் மூலம் இனப்பெருக்கம் செய்வது ஒரு சில தாவரங்களில் மட்டுமே சாத்தியமாக இருந்து வந்தது.

ஈடன் நர்சரியில் மலர் வகைகளான குண்டுமல்லி மற்றும் இட்லிப்பூ (ண்ஷ்ர்ழ்ஹ) நாற்றுகளை இலைகளிலிருந்து இனப்பெருக்கம் செய்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இவ்வாறு உருவாக்கப்படும் நாற்றுக்கள் ஒரே சீராகவும், தாய்ச்செடியின் குணங்களை கொண்டும் இருப்பதால் நல்ல மகசூலை தருவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆனால் இவற்றின் உற்பத்தி மற்றும் மகசூல் திறன் குறித்து ஆய்வு செய்த பின்னரே, பயன்பாட்டிற்கு உட்படுத்த வேண்டும்.

÷மேலும் பப்பாளி செடிகளையும் தண்டுகள் (கட்டிங் முறை) மூலம் இனப்பெருக்கம் செய்திருப்பது புதிய முயற்சியாகும். இந்த விதையில்லா இனப்பெருக்கம் முறை பப்பாளியில் நல்ல மகசூலை தரும் வாய்ப்பு உள்ளது. இந்த நர்சரி உரிமையாளர்கள் வனக்கல்லூரியில் கடந்த 5 ஆண்டுகளாக

தேசிய வேளாண் புதுமை திட்டத்தில் பயிற்சி பெற்று அக்ரி பிசினஸ் இன்குபேட்டரில் உறுப்பினர்களாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது என்றார்.

## விவசாயிகள் சங்க மாநில மாநாடு தொடங்கியது

திருவண்ணாமலை, காந்தி நகரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 28-வது மாநில மாநாடு சனிக்கிழமை தொடங்கியது.

முன்னதாக, திருவள்ளுவர் சிலை அருகில் இருந்து புறப்பட்டு வந்த தியாகிகள் ஜோதி மற்றும் கொடிக்கு மாநாட்டு அரங்கில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. விவசாயிகள் சங்கத்தின் மாநிலச் செயலர் சந்திரா, ஜோதியை பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற மாநாட்டுக்கு, எம்எல்ஏ கே.பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். முன்னாள் எம்எல்ஏ வீரய்யன், அகில இந்திய விவசாயிகள் சங்கத் தலைவர் ராமச்சந்திரன் பிள்ளை ஆகியோர் பேசினர். இதில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இன்று 2-ம் நாள் மாநாடு:

தொடர்ந்து இரண்டாம் நாளாக ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மாநாட்டில் விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலர் வரதராஜன் பங்கேற்று பேசுகிறார். திங்கள்கிழமை (டிசம்பர் 17) நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சீதாராம் யெச்சூரி பேசுகிறார்.

## முட்டைக் கொள்முதல் விலை ஒரே நாளில் 23 காசுகள் உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டைக் கொள்முதல் விலை சனிக்கிழமை ஒரே நாளில் 23 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.10 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

கிறிஸ்துமஸ், புத்தாண்டுப் பண்டிகை கேக் தயாரிப்புக்காக தமிழகம், கேரள மாநிலங்களில் முட்டைக்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளதும், வட மாநிலங்களில் முட்டை விலை பெருமளவில் உயர்ந்து வருவதுமே இந்த விலை உயர்வுக்கு முக்கியக் காரணம் என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது.

நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய நாமக்கல் மண்டலத்தில் உற்பத்தியாகும் முட்டைகளுக்கு முக்கிய உள்நாட்டுச் சந்தையாக விளங்கும் கேரள மாநில த்துக்கு வழக்கமாக தினசரி ஒரு கோடி முட்டைகள் அனுப்பப்படுகின்றன. தற்போது கிறிஸ்துமஸ்,

புத்தாண்டு பண்டிகைகளுக்காக கேக் தயாரிப்பு தீவிரமடைந்துள்ளது. கேரளத்தில் தேவைப்பாடு அதிகரித்துள்ளதால் தினசரி 1.25 கோடி முட்டைகள் அனுப்பப்படுகின்றன. இதேபோல, தமிழத்திலும் தேவைப்பாடு 10 லட்சம் முட்டைகள் வரை அதிகரித்துள்ளது. இதனால், தினசரி 1.20 கோடி முட்டைகள் தேவைப்படுகின்றன.

இதற்கிடையே, வட மாநிலங்களில் நிலவும் கடுங்குளிர் காரணமாக மும்பை, விஜயவாடா, கொல்கத்தா, பர்வாலா, தில்லி மண்டலங்களில் முட்டைக் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, நாமக்கல் மண்டலத்தில் வியாழக்கிழமை 7 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.2.87 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த முட்டைக் கொள்முதல் விலை, சனிக்கிழமை மேலும் 23 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.10 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

பிற மண்டலங்களில் நிலவும் முட்டைக் கொள்முதல் விலை: சென்னை - ரூ.2.92, பெங்களூர் - ரூ.2.95, மைசூர் -ரூ.2.87, ஹைதராபாத் -ரூ.2.90, மும்பை -ரூ.3.22, விஜயவாடா -ரூ.2.87, கொல்கத்தா -ரூ.3.35, பர்வாலா -ரூ.3.36, தில்லி -ரூ.3.48.

## பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்

தமிழகத்தில் கால்நடைத் தீவனங்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளதால், பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்த வேண்டும் என்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் சேலத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. சங்கத் தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல் தலைமை தாங்கினார். பொதுச் செயலர் எம்.ஜி.ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். இதில், பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சங்கப் பிரதிநிதிகள், பால் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் செங்கோட்டுவேல் கூறியது:

தமிழகத்தில் கடந்த ஓராண்டில் மட்டும் கால்நடைத் தீவனங்களின் விலை பலமடங்கு உயர்ந்துள்ளது. ஒரு கிலோ ரூ.5-க்கு விற்பனையான தவிடு இப்போது ரூ.10-க்கு விற்பனையாகிறது. கருக்கா தவிடு ரூ.13-க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் சிகப்பு சோளம், வீரியக் கம்பு, மக்காச்சோளம், கடலை புண்ணாக்கு, தேங்காய் புண்ணாக்கு, பருத்தி விதை உள்ளிட்ட பால் உற்பத்திக்குத் தேவையான இடுபொருள்களின் விலை 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

தற்போது வைக்கோல் உற்பத்தியும் இல்லாத நிலையில், பசுந்தீவனங்கள் உற்பத்தி, விவசாயப் பணிகளுக்கான ஆள் கூலி உயர்ந்துள்ளது. இதனால் கறவை மாடு வைத்திருப்பவர்கள் கடுமையான நஷ்டத்தையும், மன உளைச்சலையும் சந்தித்து வருகின்றனர். எனவே, பசும்பாலுக்கான கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.20 முதல் ரூ.25 வரையிலும், எருமைப்பாலின் கொள்முதல் விலையை ரூ.28 முதல் ரூ.35 வரையிலும் உயர்த்தி வழங்க வேண்டும்.

மேலும், கலப்புத் தீவனத்தின் விலை உயர்வால், நிர்ணயிக்கப்பட்ட அளவு தீவனத்தை கால்நடைகளுக்கு வழங்க முடிவதில்லை. எனவே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்குபவர்களுக்கு ஒரு கிலோ கலப்புத் தீவனம் ரூ.8 என்ற மானிய விலையில் வழங்க அரசு உத்தரவிட வேண்டும். உள்நாட்டிலேயே புண்ணாக்கிற்கு தேவை அதிகமாக இருக்கும் நிலையில், வெளிநாடுகளுக்கு அதனை ஏற்றுமதி செய்வதை அரசு தடை செய்ய வேண்டும்.

ஆவின் நிறுவனத்தில் தினசரி கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு சுமார் 27 லட்சம் லிட்டராக உயர்ந்திருக்கும் நிலையில், அதிக செலவு செய்து பால் பவுடராகவும், மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாகவும் செய்யப்படுகிறது. மேலும் அவற்றை சேகரித்து வைக்க போதுமான அளவு இடமும் இல்லை. எனவே தேவைக்கு அதிகமான பாலை, தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டும்.

பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளை ஏற்று கொள்முதல், விற்பனை விலையை அரசு உயர்த்தும்போதெல்லாம் பிற அரசியல் கட்சிகள் அது குறித்து குறை கூறுவது, ஏழை எளிய, விவசாயிகளையே பாதிக்கப்படுகிறது என்றார் அவர்.

## மகசூல் ஆய்வு சோதனைத் திட்டத்தை அமல்படுத்த வலியுறுத்தல்

டெல்டா மாவட்டங்களில் உட்கிராம அளவிலான நெல், பயிர் மகசூல் ஆய்வு என்ற சோதனைத் திட்டத்தை அமல்படுத்தி, விவசாயிகள் பயன்பெற தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைச் செயலர் பி.எஸ். மாசிலாமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு விவரம்:

காவிரி நீர்ப் பற்றாக்குறை காரணமாக சம்பாவை பாதுகாக்க ரூ. 69.88 கோடிக்கான சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டம், வேளாண் காப்பீட்டுக்கு விவசாயிகள் செலுத்தும் காப்பீட்டுத் தொகையை

தமிழக அரசு செலுத்துவது, வேளாண் மகசூல் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் திட்டம் மூலம் ரூ. 8,400 இழப்பீடு என்ற முதல்வரின் அறிவிப்புக்கு நன்றி.

பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் டிசம்பர் 15-ம் தேதிக்குள் பிரீமியம் செலுத்த வேண்டுமென்ற அறிவிப்பை மாற்றி, மத்திய அரசிடம் கால நீட்டிப்பு பெற்று விவசாயிகளை முதல்வர் பாதுக்காக்க வேண்டும். இதுவரை விவசாயிகள் பயிர்க்கடன் பெற்ற போதும், விருப்பப்பூர்வமாக செலுத்தியுள்ள தொகையை (பிரீமியம்) விவசாயிகளுக்கு திரும்பக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நிஷா புயலில் பாதிக்கப்பட்ட போது அப்போதைய தமிழக அரசு அறிவித்தப்படி விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்ட வரன்முறைப்படி வருவாய் சரக அளவில் நெல் மகசூல் ஆய்வு மேற்கொள்வதால் விவசாயிகளுக்கு பயனில்லை.

எனவே, இந்திய அளவில் 50 மாவட்டங்களில் (தமிழகத்தில் இரு மாவட்டம்) கடந்த ஆண்டு முதல் சோதனை அடிப்படையில் அமல்படுத்தப்பட்டு வரும் உட்கிராம அளவிலான நெல், பயிர் மகசூல் ஆய்வு என்ற சோதனைத் திட்டத்தை, காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலையில் அமல்படுத்தி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்க முதல்வர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## சம்பா பயிரை காப்பாற்றக் கோரி விவசாயிகள் சாலை மறியல்

கடைமடை பகுதிகளில் கருகும் நெல் பயிரைக் காப்பாற்ற தண்ணீர் வழங்கக் கோரி, பாண்டி, விளக்குடி, ஆலத்தம்பாடி ஆகிய இடங்களில் விவசாயிகள் சனிக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

பாண்டியில் தில்லைவிளாகம் காமராஜ் தலைமையில் கீழப்பெருமழை, மேலப்பெருமழை உள்ளிட்ட 10 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மறியலில் ஈடுபட்டனர்.

விளக்குடியில் ஊராட்சித் தலைவர்கள் எ. ரவீந்திரநாத்தாகூர் (குரும்பல்), முருகேசன் (குன்னூர்), கே. வீரமணி (திருவலஞ்சுழி), எம். பன்னீர்செல்வம் (கீரக்களூர்) மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் தலைமையிலும், ஆலத்தம்பாடியில் ஒன்றியக் குழு உறுப்பினர் கே. சுரேந்தர் தலைமையிலும் மறியல் நடைபெற்றது. பொதுப் பணித் துறை அதிகாரிகள் தண்ணீரை உரிய அளவில் பங்கீடு செய்து அனைத்து பகுதிகளுக்கும் தண்ணீர் விடுவதாக உறுதி அளித்ததன் பேரில் மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**விதை விற்பனை : விதிமுறையை மீறினால் கடும் நடவடிக்கை**

விதை விற்பனையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விதை ஆய்வு துணை இயக்குநர் இரா. நாராயணபிரசாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விதைச்சட்டம், 1966 மற்றும் விதைகள் விதி 1968 கடந்த 29.08.1968 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி விதை உற்பத்தியாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் விவரம்: விதை உற்பத்தியாளர்கள் விதைகளை ஆதாரம் அல்லது கரு விதைகளில் இருந்துதான் உருவாக்க வேண்டும். விதைப் பைகள் அல்லது கொள்கலனில் விவர அட்டை (ஓபெல் பச்சை நிறத்தில் மட்டுமே) பொருத்த வேண்டும்.

விவர அட்டையில் பயிர், ரகம், குவியல் எண், சோதனை செய்த நாள், காலாவதி நாள், முளைப்புத் திறன், விதைசுத்தம், இனத்தூய்மை, எடை, மருந்து கலந்த விவரம், உற்பத்தியாளர் முழு முகவரி, பருவம் மற்றும் பயிர் செய்ய ஏற்ற இடம் போன்ற விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.

சான்று விதைகளுக்கு, உற்பத்தியாளர் அட்டையுடன் சான்று அட்டையும் இணைக்கப்பட வேண்டும்.

முத்திரையிடப்பட்ட ஈய வில்லைகள் இருக்க வேண்டும். விதை விற்பனையாளர்கள் விதை விற்பனை உரிமம் இல்லாமல், விதை விற்பனை செய்யக்கூடாது.

இந்த உத்தரவை மீறினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, 3 மாதம் முதல் 7 ஆண்டு வரை சிறை தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

விதை விற்பனை செய்யும்போது அதற்கான விற்பனை பில்லில் விவசாயியின் பெயர், முழு முகவரி, விதைகள் ரகம், குவியல் எண், காலாவதி நாள் போன்ற விவரம் பூர்த்தி செய்து விவசாயியின் கையொப்பம் பெற்று ரசீது வழங்க வேண்டும்.

முளைப்புத் திறன் குறைவான அல்லது காலாவதியான அல்லது தடை செய்யப்பட்ட விதைகளை விற்பனை செய்யக்கூடாது. விதை சம்பந்தமான அனைத்து பதிவேடுகளையும் உரிய முறையில் பராமரிக்க வேண்டும்.

இந்த விதிமுறைகளை மீறுபவர்கள் மீது விதைகள் சட்டம்,1966 மற்றும் விதைகள் கட்டுப்பாட்டு ஆணை 1983-ன் படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

## பென்சன் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

காரியாபட்டியில் இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக, 60 வயது பூர்த்தியான சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவருக்கும், பென்சன் வழங்க வேண்டி, ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஒன்றியத் தலைவர் மலைச்சாமி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் அர்ஜூனன், துணைச் செயலாளர் பூங்கோதை, விவசாய சங்க ஒன்றியச் செயலாளர் அம்மாசி, பொறுப்பாளர்கள் சுரேஷ், ராஜா, பூங்கொடி, வெள்ளைச்சாமி, தாழை அம்பலம், பிரபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

16.12.2012 P.M

17.12.2012 A.M

**வேளாண் மையத்தில் இலவச பயிற்சிகள்**

மறைமலை நகர்:பொத்தேரி அடுத்த காட்டுப்பாக்கம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், இலவச நிலைய பயிற்சிகள் கீழ்கண்ட தேதிகளில் வழங்கப் படுகின்றன.

இங்கு, வரும் 17ம் தேதி பேக்கரி பொருட்கள் தயாரிப்பு குறித்தும், 18ம் தேதி, பயிர் பாதுகாப்பு கருவிகள் குறித்தும், இலவச பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. மேலும், வரும் 18,19ம் தேதிகளில், விரிவாக்க அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த பண்ணைய பயிற்சியும், வழங்கப்பட உள்ளது.

மேலும் விவரங்களுக்கு, 044- 2745 2371 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**21ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

திருவள்ளூர்:விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும், 21ம் தேதி ஆட்சியர் அலுவலகத்தில் நடக்கிறது.

திருவள்ளூர் மாவட்டத்தின், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும், 21ம் தேதி காலை, 11:00 மணிக்கு, ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது.

இதில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின் வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியல், மீன்வளம், கால்நடை, வேளாண் விற்பனை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

எனவே, மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, பயன்பெற வேண்டும் என, ஆட்சியர் வீரராகவ ராவ் கேட்டுக் கொண்டு உள்ளார்.

**நீர்வரத்து இல்லாமல் கோமுகி அணை நீர்மட்டம் ... பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கும் சூழல்**

கச்சிராயபாளையம்:கோமுகி அணைக்கு நீர்வரத்து குறைந்துவிட்டதால் அணையின் நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் கள்ளக்குறிச்சி பகுதிகளில் பாசனத்திற்கு தண்ணீர் தர

முடியாமல் விவசாயம் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன் மலை அடிவாரத்தில் கோமுகி அணை அமைந்துள்ளது. இப்பகுதி பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்கும் நோக்கத்தில் காமராஜரால் அணை கட்டப்பட்டது. இதன் மூலம் கள்ளக்குறிச்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 12,000 ஏக்கர் விளை நிலங்கள் பாசனம் பெற்று வருகிறது.
அணையின் மொத்த கொள்ளளவு 46 அடியாகும். 560.96 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்க முடியும். கல்வராயன்மலை பகுதிகளில் பெய்யும் மழைநீர் தேக்கப்பட்டு பாசனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரானது, வடக்கநந்தல், சோமண்டார்குடி, ஏமப்பேர், கள்ளக்குறிச்சி, தென் கீரனூர், நீலமங்கலம், குரூர், பொரசக்குறிச்சி, விருகாவூர், நாகலூர் மற்றும் வேளாக்குறிச்சி ஆகிய பகுதி ஏரிகள், குளங்கள், அணைக்கட்டுகளில் தேக்கப்பட்டும் பாசனத்திற்கு வழங்கப்படுகிறது.
சமீபத்தில் பெய்த மழையால் ஏரி நிரம்பியதையொட்டி கடந்த அக்டோபர் 25ம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. முதல் 15 நாளைக்கு ஆற்றில் வினாடிக்கு 60 கன அடியும், பாசன வாய்க்காலில் 50 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்
பட்டது.
அடுத்து, நவம்பர் 9ம் தேதி முதல் வினாடிக்கு 120 கன அடி ஆற்று வழியாகவும், பாசன வாய்க்காலில் 100 கன அடியும் திறந்து விடப்பட்டு வருகிறது.
பருவ மழை முற்றிலும் ஏமாற்றியதால் தற்போது ஏரிக்கு நீர்வரத்து முற்றிலும் குறைந்துவிட்டது. இதனால் ஏரியின் நீர்மட்டம் நாளுக்கு நாள் வெகுவாக குறைந்து வருகிறது. தற்போது அணையின் நீர் மட்டம் 29 அடி மட்டுமே உள்ளது. மீன் வளர்ப்புக்காக அணையில் குறைந்தது 22 அடி வரை ( 62.47 மில்லியன் கன அடி) தண்ணீர் இருப்பு வைக்க வேண்டும்.
எனவே மீதமுள்ள 7 அடி நீர் மட்டுமே பாசனத்திற்கு திறந்த முடியும் நிலை உள்ளது. அதனால் கோமுகி அணையில் இருந்து இந்த ஆண்டு பாசனத்திற்கு போதுமான தண்ணீர் தரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அணையை நம்பியுள்ள விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டு விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.
மேலும் அணையின் நீர்மட்டம் குறைவதால் ஏரி மற்றும் குளங்களில் நீர் குறைவதோடு, கிணறுகளிலும் தண்ணீர் வறண்டு நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## நெடி மோழியனூரில் விவசாயிகளுக்கு பயிற்சி

மயிலம்:நெடி மோழியனூரில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.
மயிலம் ஒன்றிய ஆத்மா திட்டம் சார்பில் நெடி மோழியனூர் மகாத்மா காந்தி சமுதாய கூடத்தில் விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி நடந்தது. வட்டார ஆத்மா திட்ட தலைவர் கண்ணன் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர் உமா கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார். கிராம நிர்வாக அலுவலர் மங்கையர்கரசி வரவேற்றார்.
விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் குறித்து, திட்ட மேலாளர் ஸ்டெல்லா மேரி விளக்கிப் பேசினார்.
உதவி வேளாண்மை இயக்குனர் ஆறுமுகம், கால்நடை மருத்துவர் நடராஜன், தோட்ட கலை உதவி அலுவலர் சதீஷ், பட்டு வளர்ப்பு துறை அலு வலர் பாபு, எண்ணெய் உற்பத்தி மேற்பார்வையாளர் இளவழகன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர்.
மயிலம் பகுதியில் திருந்திய நெல் சாகுபடி செய்திருந்த விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வேளாண்மை துறை சார்பில் வழங்கப்பட்டது.
முகமில் உதவி வேளாண்மை அலுவலர்கள் மகாலட்சுமி, சீதா, சுதா, மங்கையர்கரசி, பூவிழி, முன்னோடி விவ சாயிகள் ராஜேந்திரன், வீரட்டா னேஸ்வரன், வகாப், ஊராட்சி துணை தலைவர் ஜனார்த்தனன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண் டனர்.
முடிவில் ஆத்மா திட்ட குழு ஒன்றிய அலுவலர் ஸ்டாலின் நன்றி கூறினார்.

## இடம்பெயரும் அறுவடை இயந்திரம்தமிழகத்தில் நெல் சாகுபடி பாதிப்பு

மேட்டூர்: தமிழகத்தில் நடப்பாண்டு சம்பா நெல் சாகுபடி பாதித்துள்ளதால், அறுவடை செய்யும் வாய்ப்பு குறைந்துள்ளது. இதனால், தமிழகத்தை சேர்ந்த நெல் அறுவடை இயந்திரங்கள் கர்நாடகாவுக்கு படையெடுகிறது.காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆண்டுதோறும் விவசாயிகள், 15 லட்சம் ஏக்கரில் குறுவை, சம்பா பயிர்கள் சாகுபடி செய்வர். ஆண்டுதோறும் டிசம்பர், ஜனவரி மாதங்களிஙல் டெல்டாவில் சம்பா அறுவடை துவங்கும். கூலியாட்கள் பற்றாக்குறையால் இயந்திரங்கள் மூலம் விவசாயிகள் சம்பா நெல் அறுவடை செய்வர்.
இதற்காக சேலம், விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து, 1000க்கும் மேற்பட்ட நெல் அறுவடை இயந்திரங்கள் டெல்டா மாவட்டம் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் நெல் அறுவடையில் ஈடுபடுத்தப்படும். நடப்பாண்டு, தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கைவிட்டதால், டெல்டா மாவட்டங்கள் மட்டுமின்றி, மாநிலம் முழுவதும் சம்பா சாகுபடி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.தமிழகத்தில் சம்பா நெல் அறுவடை குறைவாக இருக்கும் நிலையில், கர்நாடகாவில் காவிரி கரையோர மாவட்டங்களில் சம்பா நெல் அறுவடை துவங்கியுள்ளது. இதனால், சேலம், விழுப்புரம் மாவட்டத்தை ÷சர்ந்த நெல் அறுவடை இயந்திரங்களை, அதன் உரிமையாளர்கள் கடந்த சில நாட்களாக கர்நாடகாவுக்கு கொண்டு செல்கின்றனர்.கடந்த ஒரு மாதத்தில் மட்டும், 500க்கும் மேற்பட்ட நெல் அறுவடை இயந்திரங்கள், மேட்டூர் அடுத்த பாலாறு வழியாக கர்நாடகா மாநிலம், பத்ராவதி, தாவணகேரே, சிமோகா, மாண்டியா, மைசூரு பகுதிக்கு சென்றுள்ளது.

## விதை விற்பனை நிலையத்தில்விதை ஆய்வாளர் குழுவினர் ஆய்வு

சேலம்: விதைச்சான்று மற்றும் விற்பனைச் சான்றளிப்புத்துறையின், விதை ஆய்வுப் பிரிவின் கீழ், விதை விற்பனை நிலையங்களுக்கு, சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் மூலம் விதை விற்பனை உரிமம் வழங்கப்படுகிறது.விதை விற்பனை செய்யும் தனியார் நிலையங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில், விதை ஆய்வாளர்கள், அவ்வப்போது ஆய்வு நடத்துவர். சேலம் மாவட்டத்தில், ஓமலூர், காடையாம்பட்டி, தாரமங்கலம், நங்கவள்ளி, மேச்சேரி உள்ளிட்ட இடங்களில் உள்ள விதை விற்பனை மையங்களில், சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் தலைமையில், விதை ஆய்வாளர்கள் வெங்கடேசன், ரவிச்சந்திரன், கவுதமன், ராஜேந்திரன் ஆகியோர் கொண்ட குழு நேற்று முன்தினம் ஆய்வு நடத்தியது.
ஒரே நாளில், 48 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதில், காலாவதியான விதைகள் இருப்பு வைக்கப்பட்டிருந்த ஒரு விற்பனை நிலையத்தில், 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள விதைகள் முடக்கப்பட்டு விற்பனைக்கு தடை செய்யப்பட்டது.அதேபோல், உரிமத்தை புதுப்பிக்காத இரண்டு விற்பனை நிலையங்களுக்கு தற்காலிக தடை செய்யப்பட்டு, உரிமம் புதுப்பிக்க அறிவுரை வழங்கப்பட்டது. விதை விற்பனை உரிமத்தின் நகலை பார்வைக்கு வைக்கவும், தகவல் பலகையை முறையாக பராமரிக்கவும், இருப்பு பதிவேடு மற்றும் விற்பனை பில் புத்தகம் சரியான முறையில் பராமரிக்கவும், விதைகளை ரசாயண உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளுடன் ஒன்றாக வைக்காமல், விதைகளை மட்டும் தனியாக வைக்கவும், மாதாந்திர விற்பனை அறிக்கை தவறாமல் அனுப்புவம், விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம்ரூ .15 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், கடந்த சனிக்கிழமை இரவு, மஞ்சள் ஏலம் நடந்தது. ஏலத்துக்கு, கடலூர், நையினார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திருவண்ணாமலை, விவசாயிகள் மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,059 ரூபாய்க்கும், அதிகபட்சம், 6,799 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 3,509 ரூபாய்க்கும், அதிகபட்சம், 5,609 ரூபாய்க்கும் விற்பனையானது.ஏலத்தில், சராசரியாக குவிண்டாலுக்கு விரலி மஞ்சள், 500 ரூபாய், உருண்டை மஞ்சள், 270 ரூபாய் விலை உயர்ந்தது. ஏலத்தில், 500 மூட்டை மஞ்சள், 15 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## பாக்குத் தோப்பில் ஊடு பயிராககாஃபி செடி வளர்க்கும் விவசாயி

ராசிபுரம்: ராசிபுரம் அருகே பாக்குத் தோப்பில், ஊடு பயிராக, காஃபி செடி பயிரிடப்பட்டு வருகிறது.நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தொ.ஜேடர்பாளையம் அருகே ஒசைக்கரையான் ஊற்று உள்ளது. கொல்லிமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இப்பகுதியை சேர்ந்தவர் வக்கீல்

குமார்.அவருக்கு சொந்தமான மூன்று ஏக்கர் நிலத்தில், பாக்கு மரங்களை நட்டு பராமரித்து வருகிறார். பாக்கு மரத்தின் இடையே, ஊடுபயிராக, காஃபி செடி வளர்க்க முடிவு செய்தார். நாமகிரிப்பேட்டை தோட்டக்கலை துறை மூலம், 3,000 காஃபி செடிகளை பெற்று, அதை, பாக்கு மரத்தின் இடையே ஊடுபயிராக பயிரிட்டுள்ளார். இந்த காஃபி செடிகள், இரண்டரை ஆண்டுகளில் பலன் தரக்கூடியது.இந்த காஃபி செடி வளரும்போது, அதன் இலைகள், நன்கு படர்ந்து, நிழலைத் தருவதுடன், அப்பகுதியில் நல்ல குளிர்ச்சியை தரும் தன்மை கொண்டது. அதனால், பாக்கு மரத்துக்கு தண்ணீர் பாய்ச்சும் போது, தண்ணீர் ஆவியாகாமல், காஃபி செடி பார்த்துக்கொள்கிறது.

மேலும், கூலி ஆட்களை வைத்து களை எடுக்கும் வேலையும் மிகக்குறைவு. பருவ நிலைக்கு ஏற்ப காஃபி செடியின் இலைகள் உதிரும். அவ்வாறு உதிரும் இலைகள், பாக்கு மரத்துக்கு நல்ல தழைச்சத்து உரமாக மாறுகிறது. காஃபி செடிக்கு என்று தனியாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்ற கவலையும் இல்லை.வக்கீல் குமார் கூறியதாவது:மூன்று ஏக்கர் பரப்பில், பாக்கு மரம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதில், ஊடுபயிராக காஃபி செடியை வளர்க்க முடிவு செய்தேன். அதை சம்பந்தப்பட்ட தோட்டக்கலை துறையினரிடம் ஆலோசனை பெற்று, 3,000 காஃபி செடியை வாங்கி பயிரிட்டுள்ளேன்.இப்பயிர் இரண்டரை ஆண்டுகளில் பலன் தரக்கூடியது. அதற்காக தனியாக தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை. ஒரே நேரத்தில் தண்ணீர் பாய்ச்சும்போது, இரண்டு பயிர்களுக்கும் சென்றடைகிறது. வேலை ஆட்களும் அதிகம் தேவையில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## டிச., 24ல் பருத்தி ஏலம்துவக்கம் : செயலாளர்

ராசிபுரம்: "கவுண்டம்பாளையம் பருத்தி விற்பனை நிலையத்தில், டிசம்பர், 24ம் தேதி முதல் பருத்தி ஏலம் துவங்குகிறது' என, ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்.,) செயலாளர் (பொறுப்பு) மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ராசிபுரம், ஆர்.சி.எம்.எஸ்.,க்கு சொந்தமான, ராசிபுரம் அடுத்த கவுண்டம்பாளையம் பருத்தி விற்பனை வளாகத்தில், பருத்தி டெண்டர், டிசம்பர், 24ம் தேதி முதல் துவங்குகிறது. அதில், ஆத்தூர், தெடாவூர், ஊத்தங்கரை, பொள்ளாச்சி, தேனி, அன்னூர், அவினாசி, நாமக்கல், அருப்புக்கோட்டை, விருதுநகர் மற்றும் சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, ஏராளமான வியாபாரிகள் பங்கேற்று, ஏலம் எடுப்பர்.அதனால், பருத்திக்கு நல்ல விலை கிடைக்கும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி, விவசாயிகள், தங்கள் விளை நிலத்தில் சாகுபடி செய்துள்ள பருத்தியை அறுவடை செய்து, கவுண்டம்பாளையம் பருத்தி விற்பனை நிலையத்தில் நடக்கும் டெண்டரில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வாணியாறு அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு

பாப்பிரெட்டிப்பட்டி: பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த வாணியாறு அணையிலிருந்து, பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த வாணியாறு நீர்த்தேக்க ஆயக்கட்டுதாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, வாணியாற்று அணையிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு பாசனத்திற்காக, புதிய ஆயக்கட்டு பாசன பரப்பு, 8,550 ஏக்கர் நிலங்களும், பழைய பாசன பரப்பு, 1,967 ஏக்கர் நிலங்களும் பயன்பெறும் வகையில் வாணியாறு அணையில் தற்போதைய நீர் இருப்பை கொண்டு வலதுப்புற கால் வாயில் வினாடிக்கு, 50 கனஅடி வீதமும், இடதுபுற கால்வாயில் வினாடிக்கு, 45 கனஅடி வீதமும் தண்ணீரை அமைச்சர் பழனியப்பன் திறந்து வைத்தார்.புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு இடது மற்றும் வலதுப்புற கால்வாய்களில், ஒவ்வொரு கால்வாய்களிலும், இரு மண்டலகளாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திற்கும், ஐந்து நாட்கள் வீதம், 10 நாட்கள் ஒரு நனைப்பும், ஐந்து நாட்கள் இடைவெளி விட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கு, ஐந்து நாட்கள் வீதம், 10 நாட்களுக்கு இரண்டாவது நனைப்பும், ஐந்து நாட்கள் இடைவெளி விட்டு மூன்றாவது, நான்காவது நனைப் பும், 51 நாட்களுக்கு சுழற்சி முறையில் தண்ணீர் வழங்கப்படும்.பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளான வெங்கடசமுத்திரம் ஏரி, 100சதவீதம், ஆலாபுரம் ஏரியில், 75 சதவீதம் உபரி நீரும் சென்று நிரம்பியது போக மீதமுள்ள ஆலாபுரம் ஏரி, 25 சதவீதம் பறையப்பட்டி ஏரி, ஓந்தியாம்பட்டி ஏரி, தென்கரைக்கோட்டை ஏரிகளுக்கு ,ஒரு முறை தண்ணீர் நிரப்பி தரவும் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.இதன்மூலம் பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில் உள்ள மோளையானூர், கோழிமேக்கனூர், பாப்பிரெட்டிப்பட்டி, அதிகாரப்பட்டி, அலமேலுபுரம், தாதம்பட்டி, ஆலாபுரம், மருக்கலாம்பட்டி, ஓந்தியாம்பட்டி, கவுண்டம்பட்டி, புதுப்பட்டி, வெங்கடசமுத்திரம், தேவராஜபாளையம், மெணசி, பூதநத்தம், தென்கரைக்கோட்டை, ஜம்மனஅள்ளி, பறையப்பட்டி புதூர், நாச்சினம்பட்டி, சின்னாங்குப்பம் ஆகிய, 20 கிராமங்களை சேர்ந்த, 10 ஆயிரத்து, 517 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்.எம்.எல்.ஏ., அன்பழகன், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அன்பழகன், டி.ஆர்.ஓ., ராமர், யூனியன் சேர்மன் முருகன், துணை சேர்மன் ராஜேந்திரன், பஞ்சாயத்து தலைவர் கிருஷ்ணமூர்த்தி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், ஆதம்பாட்ஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நீர்வரத்து இல்லாமல் கோமுகி அணை நீர்மட்டம் ... பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கும் சூழல்

கச்சிராயபாளையம்:கோமுகி அணைக்கு நீர்வரத்து குறைந்துவிட்டதால் அணையின் நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் கள்ளக்குறிச்சி பகுதிகளில் பாசனத்திற்கு தண்ணீர் தர முடியாமல் விவசாயம் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன் மலை அடிவாரத்தில் கோமுகி அணை

அமைந்துள்ளது. இப்பகுதி பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்கும் நோக்கத்தில் காமராஜரால் அணை கட்டப்பட்டது. இதன் மூலம் கள்ளக்குறிச்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 12,000 ஏக்கர் விளை நிலங்கள் பாசனம் பெற்று வருகிறது.

அணையின் மொத்த கொள்ளளவு 46 அடியாகும். 560.96 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்க முடியும். கல்வராயன்மலை பகுதிகளில் பெய்யும் மழைநீர் தேக்கப்பட்டு பாசனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரானது, வடக்கநந்தல், சோமண்டார்குடி, ஏமப்பேர், கள்ளக்குறிச்சி, தென் கீரனூர், நீலமங்கலம், குரூர், பொரசக்குறிச்சி, விருகாவூர், நாகலூர் மற்றும் வேளாக்குறிச்சி ஆகிய பகுதி ஏரிகள், குளங்கள், அணைக்கட்டுகளில் தேக்கப்பட்டும் பாசனத்திற்கு வழங்கப்படுகிறது.

சமீபத்தில் பெய்த மழையால் ஏரி நிரம்பியதையொட்டி கடந்த அக்டோபர் 25ம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. முதல் 15 நாளைக்கு ஆற்றில் வினாடிக்கு 60 கன அடியும், பாசன வாய்க்காலில் 50 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்
பட்டது.

அடுத்து, நவம்பர் 9ம் தேதி முதல் வினாடிக்கு 120 கன அடி ஆற்று வழியாகவும், பாசன வாய்க்காலில் 100 கன அடியும் திறந்து விடப்பட்டு வருகிறது.

பருவ மழை முற்றிலும் ஏமாற்றியதால் தற்போது ஏரிக்கு நீர்வரத்து முற்றிலும் குறைந்துவிட்டது. இதனால் ஏரியின் நீர்மட்டம் நாளுக்கு நாள் வெகுவாக குறைந்து வருகிறது. தற்போது அணையின் நீர் மட்டம் 29 அடி மட்டுமே உள்ளது. மீன் வளர்ப்புக்காக அணையில் குறைந்தது 22 அடி வரை ( 62.47 மில்லியன் கன அடி) தண்ணீர் இருப்பு வைக்க வேண்டும்.

எனவே மீதமுள்ள 7 அடி நீர் மட்டுமே பாசனத்திற்கு திறந்த முடியும் நிலை உள்ளது. அதனால் கோமுகி அணையில் இருந்து இந்த ஆண்டு பாசனத்திற்கு போதுமான தண்ணீர் தரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அணையை நம்பியுள்ள விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டு விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

மேலும் அணையின் நீர்மட்டம் குறைவதால் ஏரி மற்றும் குளங்களில் நீர் குறைவதோடு, கிணறுகளிலும் தண்ணீர் வறண்டு நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## தேயிலை வர்த்தகத்தில் 103 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் :ஆண்டின் முதல் 11 மாதங்களில் திருப்தி

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏல மைய வர்த்தகத்தில் இந்தாண்டின் முதல் 11 மாதங்களில், கடந்தாண்டை காட்டிலும் 103.2 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது. குன்னூர் கோத்தாரி வேளாண்மை மேலாண்மை மையத்தில் நடந்த கருத்தரங்கில், சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் பேசியதாவது: நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் வாரந்தோறும் குன்னூர் தேயிலை ஏல மையம் மூலம் விற்கப்படுகிறது. இந்தாண்டு ஜனவரி முதல்

நவம்பர் வரை தேயிலை வர்த்தகத்தில் ஏற்பட்ட ஏறுமுகம், கடந்த 11 மாத மொத்த வருமானத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 11 மாதங்களில் 48 ஏலம் நடந்துள்ளன; மொத்தம் 5.13 கோடி கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டுள்ளது; சராசரி விலை கிலோவுக்கு 81.20 ரூபாயாக இருந்தது. கடந்தாண்டின் (2011) முதல் 11 மாதங்களில் 4.94 கோடி கிலோ தேயிலை விற்கப்பட்டு, சராசரி விலையாக கிலோவுக்கு 63.47 ரூபாய் பெறப்பட்டுள்ளது. நடப்பாண்டின் முதல் 11 மாதங்களில் 416.56 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது; கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 313.54 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டின் முதல் 11 மாதங்களில் 19 லட்சம் கிலோ தேயிலை தூள் கூடுதலாக விற்கப்பட்டு, 103.02 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.தேயிலை விலை உயர்வுக்கு, உள்நாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் கொள்முதல் செய்ததே காரணம். இவ்வாறு, சுந்தர் பேசினார்.

## விற்பனைக்கு மும்பை செல்லும் தேங்காய்

உடுமலை : உடுமலை அருகே தளி மற்றும் சுற்றுப்பகுதியில் இருந்து தேங்காய் கொள்முதல் செய்யும் வியாபாரிகள், விற்பனைக்காக, மும்பைக்கு அனுப்பி வருகின்றனர். இதனால், தேங்காய் விலை "கிடுகிடு'வென உயர்ந்துள்ளது.

உடுமலை, மடத்துக்குளம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. காய்கறி மற்றும் மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகின்றன. மற்ற பயிர்களைவிட, இப்பகுதியில் தென்னை அதிகளவு உள்ளன. தளி மற்றும் சுற்றுப்பகுதிகளில், 2,000 ஏக்கருக்கு மேல், தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.சாகுபடி செய்யப்படும் தேங்காய், இளநீர், உள்ளூர் மட்டுமின்றி,சென்னைக்கும், வெளிமாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன. தென்னை சாகுபடி அதிகமாக உள்ளதால், இப்பகுதியில் தென்னை சார்ந்த மஞ்சி உற்பத்தி, பித் பிளாக் தயாரிப்பு போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன. தற்போது, மற்ற மாநிலங்களுக்கும் தேங்காய் அனுப்பும் பணியில் வியாபாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். தளி பகுதியிலுள்ள தோட்டங்களுக்கு சென்று விவசாயிகளை சந்தித்து, தேங்காய்களை கிராம் கணக்கிற்கு கொள்முதல் செய்துவருகின்றனர்.விவசாயிகள் கூறுகையில்,"உள்ளூர் மட்டுமின்றி வெளிமாவட்டங்களுக்கும் தேங்காய் மற்றும் இளநீர் அனுப்பப்படும். இளநீர் 11 முதல் 12 ரூபாய் வரை விற்கப்படுகிறது. தற்போது, தேங்காயை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். தேங்காய்களை முதல் தரம்,இரண்டாம் தரம், மூன்றாம் தரம் என பிரித்து, கிராம் கணக்கில் விலைநிர்ணயித்து கொள்முதல் செய்து, சாக்குப்பையில் அடைத்து மும்பைக்கு அனுப்பி வருகின்றனர். இதனால், தற்போது மீண்டும் தேங்காய் உறித்தல் உள்ளிட்ட பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன,' என்றனர். விலை உயர்ந்ததுகடந்த சில மாதங்களாக, ஒரு தேங்காய்க்கு

நான்கு ரூபாய் மட்டுமே கிடைத்ததால் விற்பனை செய்ய முடியாமல் தேக்கமடைந்தது. போதிய விலை கிடைக்காததால், தோட்டங்களிலேயே இருப்பு வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், தேவை அதிகரித்துள்ளதால், விலை கணிசமாக உயர்ந்துள்ளது. தற்போது, ஆறு முதல் ஏழு ரூபாய் வரை, விலை நிர்ணயித்து, விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிறது. விலை உயர்வாலும், தேக்கமடையாமலும் விற்பனையாவதால், விவசாயிகள் ஓரளவு நிம்மதி அடைந்துள்ளனர்.

**இளநீர் உற்பத்தியை அதிகரிக்க தென்னையில் குட்டை ரகம் : ஆழியாறு ஆராய்ச்சி நிலையம் தகவல்**

பொள்ளாச்சி : ""தமிழகத்தில் முதல்முறையாக இளநீர் உற்பத்தியை அதிகரிக்க, ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையம் சார்பில் குட்டை ரகத்தை கண்டுபிடித்துள்ளதாக," அதன் தலைவர் ராஜாமாணிக்கம் தெரிவித்தார். பொள்ளாச்சியில், மத்திய பண்ணை பயிர்கள் ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடந்த கருத்தரங்கில், ஆழியார் நகர் தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜாமாணிக்கம் பேசியதாவது: தென்னை ஆராய்ச்சி நிலையம் சார்பில் புதிதாக தென்னையில் மூன்று ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில், அரசம்பட்டி, டிப்பூர் ஆகியவை நெட்டை ரகங்களாகவும், கெந்தாலி என்பது குட்டை ரகமாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில், முதல் முறையாக குட்டை ரக இளநீர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில், மேற்கு மண்டல பகுதிகளுக்காக, ஆண்டில் மூன்று பருவ காலத்தில் ஒரு நாளுக்கு எத்தனை முறை சொட்டு நீர் பாசனத்தை செயல்படுத்த வேண்டும் என்ற ஆராய்ச்சி மேற்கொண்டது. இதில், மழை காலத்தில், 45 லிட்டரும், குளிர் மற்றும் பனி காலத்தில் 55 லிட்டரும், வெயில் காலத்தில் 65 லிட்டரும் சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தலாம் என கண்டறியப்பட்டுள்ளது. இந்த முறையில் பயன்படுத்தினால், 100 முதல் 150 காய் வரை பெறலாம். சொட்டு நீரில் உரம் கலந்து செலுத்தும் முறையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென்னையில், ஊடுபயிர்கள் பயிரிட்டால் கூடுதல் லாபம் ஈட்டலாம். இதில், 16 வகையான ஊடுபயிர்களை பயிரிடலாம் என கண்டறியப்பட்டுள்ளது. முதல்வகையாக, ஜாதிக்காயை பயன்படுத்தலாம். கோ- கோ, வாழை ஆகியவையும் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. ஊடுபயிர்களின் வகைகளை பொறுத்து கூடுதலாக ஒரு லட்சம் முதல் 1.15 லட்சம் ரூபாய் வரை கூடுதல் வருமானம் ஈட்டலாம். இவற்றில் இருந்து கிடைக்கும் இலைகளை தென்னை மரங்களுக்கு உரமாக பயன்படுத்தினால், 20 முதல் 30 சதவீதம் உற்பத்தியை அதிகரிக்கலாம். தற்போது, குறும்பை விழும் பிரச்னை அதிகரித்துள்ளது. இதை தவிர்க்க, ஆராய்ச்சி நிலையம் சார்பில் "டானிக்' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ஊட்டசத்து கிடைக்கும். காண்டாமிருக வண்டு, சிவப்பு கூண் வண்டு, சாறு உறிஞ்சும் பூச்சி ஆகியவற்றை கட்டுபடுத்த ஒருங்கிணைந்த பூச்சி கட்டுபாட்டு முறைகள் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. தென்னையில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல், தென்னையை தேர்வு செய்தல் உள்ளிட்ட குறித்து சான்றிதழ் கல்வி கற்பிக்கப்படுகிறது. இதற்கு

1,500 ரூபாய் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த சான்றிதழ் கொண்டு, தென்னை வளர்ச்சி வாரியத்தில் இருந்து 30 சதவீதம் மானியமாக கிடைக்கும். இது குறித்த விபரங்களுக்கு, தென்னை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகளை அணுகலாம்.இவ்வாறு, அவர் பேசினார்.

**ராமநாதபுரம் , சிவகங்கையில் ஆவின் உற்பத்தி பனி , கொசுக்கடியால் பால் சுரப்பதி ல் சிக்கல்**

ராமநாதபுரம்:பனி, கொசுக்கடி பாதிப்பால் மாடுகள் பால் சுரப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.
இதனால், ராமநாத
புரம், சிவகங்கையில் பால் உற்பத்தி 4,000மாக குறைந்துள்ளது.
சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு காரைக்குடி ஆவின் மூலம் தினமும் 29 ஆயிரம் லிட்டர் பால் வினியோகிக்கப்படுகிறது.
நிலைப்படுத்திய பால் ஒரு
லிட்டர் 31 ரூபாய், உவர் நிலைப்
படுத்திய பால் ஒரு லிட்டர் 27க்கு விற்கப்படுகிறது.
மாத சந்தாதாரர்களுக்கு ஒரு
லிட்டர் பால் ரூ.31.50 காசுக்கு வழங்க படுகிறது. மொத்தம் 10 ஆயிரம்
சந்தாதாரர்கள் உள்ளனர். பால்
சப்ளைக்காக, 42 பூத்கள் உள்ளன.
பால் உற்பத்தி 50 ஆயிரத்தை அதிகரிக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக, கால்நடைதுறை சார்பில் கிராமங்கள் தோறும், விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டன. பால்
உற்பத்தியும் கணிசமாக
உயர்ந்தது.
கொசு, பனியால் பாதிப்பு: சில நாட்களாக பனி அதிகமாக இருப்பதாலும், மாடுகள் பால்
சுரப்பதில்
சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் சராசரியாக 2 லிட்டர் வரை கொடுக்கும் பசு, ஒரு லிட்டர் மட்டுமே கொடுக்கிறது. உற்பத்தி 4,000
லிட்டர் வரை குறைந்துள்ளது.
ஆவின் அதிகாரி ஒருவர் கூறிய
தாவது: மாவட்டந்தோறும் கடந்த ஆண்டு தலா 500க்கும் மேற்பட்ட கறவை மாடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இதனால், 27
ஆயிரம் லிட்டர் வரை மட்டுமே உற்பத்தியான பால், சில மாதங்களில் 50
ஆயிரம் என்ற இலக்கை எட்டியது. தேவை போக மீதமுள்ள 20,000

லிட்டர் பால் கேரளாவுக்கு வழங்கப்பட்டது.

மாடுகளின் மடியில் கொசு கடிப்பதால் உற்பத்தி குறைந்துள்ளது. தற்போது 46 ஆயிரம் லிட்டர் மட்டுமே உற்பத்தியாகிறது. மார்ச் வரை இப்

பிரச்னை இருக்கும், என்றார்.

## வாழைகளுக்கு இழப்பீடு "ஓராண்டாகியும் வேளாண்மை துறை "கொர் '

சத்தியமங்கலம்கடந்த ஆண்டு சத்தியமங்கலம் பகுதியில் ஏற்பட்ட சூறாவளி காற்றில் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு இதுவரை வேளாண்மை துறை சார்பாக இழப்பீடு கொடுக்கவில்லை. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.இந்தியாவின் முக்கிய தொழிலாக கருதப்படுவது விவசாயமாகும். மத்திய, மாநில அரசுகள் வரை விவசாயத்துக்கு முக்கியதுவம் கொடுக்கின்றனர். வங்கிகளில் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் கடனுக்கும் கூட மிக குறைந்த வட்டியே வசூலிக்கப்படுகிறது.இருப்பினும், இயற்கை சீற்றத்தால் விவசாய பயிர் பாதிக்கப்பட்டால் அதை வேளாண்மை துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகளை கொண்டு கணக்கிட்டு, அப்பயிருக்கு இழப்பீடு கொடுக்கும் திட்டத்தைகடந்த பல ஆண்டுகளுக்கு முன்னரே அரசு கொண்டு வந்தது.ஆனால் இயற்கை சீற்றத்தின்போது விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கு உரியமுறையில் இழப்பீடு சென்று சேர்வதில்லை. வேளாண்மை துறை அதிகாரிகளின் அலட்சியத்தால், இந்த இழப்பீடு கணக்கிடுவதுடன் நின்றுவிடுகிறது.சத்தியமங்கலம் அருகே உள்ள அரியப்பம்பாளையத்தை சேர்ந்த ரத்தினசாமி என்ற விவசாயி மற்றும் இதே ஊரை சேர்ந்த ஜோதி என்ற விவசாயிகளின் வாழை, கடந்த ஆண்டு திடீரென வீசிய சூறாவளி காற்றால் குலை தள்ளும் தருணத்தில் அடியோடு சாய்ந்தது. உடன் இந்த இரண்டு விவசாயிகளின் தோட்டத்தில், பாதிக்கப்பட்ட வாழைகளை கிராம நிர்வாக அதிகாரி மற்றும் தாசில்தார் மற்றும் தோட்டகலைத்துறை அதிகாரிகள் வந்து ஆய்வு செய்தனர்.பாதிக்கப்பட்ட வாழைகள் குறித்து கணக்கெடுத்து இதற்கான இழப்பீட்டு தொகை காசோலையாக வரும், எனக் கூறி சென்று ஒராண்டு ஆகிவிட்டது. ஆனால் இதுவரை இந்த விவசாயிகள் இருவருக்கும் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு இழப்பீடு குறித்து எந்த தகவலும் இல்லை, என்கின்றனர்.தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் விசாரித்தபோது, "நாங்கள் பாதிப்பு குறித்து வேளாண்மை துறைக்கு அறிக்கை அனுப்பி விட்டோம். இனி மாவட்ட வேளாண்மை துறைதான் இழப்பீடு வழங்கும், என்று கூறுகின்றனர். ஆனால் ஒரு ஆண்டாகியும் இதுவரை எவ்வித இழப்பீட்டு தொகையும் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை.அரசு அறிவிக்கும் சலுகைகள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு சென்றடைய செய்வதே அரசு கண்காணிக்காததால், அதிகாரிகள் மெத்தனமாக செயல்படுகின்றனர். வேளாண்மை துறை அதிகாரிகள் விரைவாக, பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுத்தால்தான் அரசின் திட்டம் நிறைவேறும்.

**மின் தடையால் பருப்பு ஆலைகள் முடங்கின :விருதுநகரில் இழப்பு ரூ.13 கோடி**



விருதுநகர்:மின்தடையால், விருதுநகரில் மட்டும் எண்ணெய், பருப்பு ஆலைகள், தினமும், 13 கோடி ரூபாய் வரை இழப்பை சந்தித்து வருகின்றன. மேலும், 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.விருதுநகரில், 140 பருப்பு ஆலைகள் உள்ளன. இங்கு நாள்தோறும், 1,500 டன் அளவிற்கு உளுந்து, துவரை, பாசிப் பருப்பு, மசூர் பருப்பு, பட்டாணி ஆகியவை பதப்படுத்தப்பட்டு வந்தன.

இது, தற்போதைய மின் தடையால், 400 -700 டன்னாக குறைந்துள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு, 2.50 கோடி ரூபாய் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. நேரடியாகவும், மறைமுக மாகவும், 8 ஆயிரம் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.இங்குள்ள, 80 எண்ணெய் உற்பத்தி ஆலைகள், நாள் ஒன்றுக்கு, 50 டன் வரை உற்பத்தி செய்த நிலை மாறி,மின் தடையால், 15 டன் மட்டுமே உற்பத்தி செய்கின்றன.இதில் மட்டும், 4.50 கோடி ரூபாய் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. 1,000 தொழிலாளர்கள், பணி வாய்ப்பை இழந்து உள்ளனர்.

மல்லியை சுத்தம் செய்யும், 120 ஆலைகளில், தொடர்ந்து, 8 மணி நேரம் மின்சாரம் இருந்தால் மட்டுமே, சுத்தம் செய்யும் பணிகள் நடக்கும்.இங்கு, நாள் ஒன்றுக்கு சுத்தம் செய்யப்படும் மூட்டைகளின் எண்ணிக்கை, 10 ஆயிரத்தில் இருந்து, 4,000மாக குறைந்துள்ளது.இதனால், 2 கோடி ரூபாய் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. 3,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தவிர, தகர டின் தயாரிப்பு உள்ளிட்ட சிறு தொழில்களுக்கு நாள் ஒன்றுக்கு, 4 கோடி ரூபாய் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. 3,000 தொழி லாளர்களுக்கும் பணி இழப்பு ஏற்பட்டு உள்ளது. மொத்தத்தில் அனைத்து பொருட்களின் உற்பத்தி குறைவால், தினம், 13 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டு உள்ளது.

பருப்பு உற்பத்தியாளர் கார்த்திகேயன் கூறும்போது, "மின்தடையால், பருப்பு உற்பத்தி 40 சதவீதமாக குறைந்து விட்டது. ஜெனரேட்டர் மூலம் உற்பத்தி செய்யும் போது, உற்பத்தி செலவு மூன்று மடங்கு உயர்கிறது. இந்த நிலை நீடித்தால், பருப்பு ஆலைகள் மூடப்படும் நிலை ஏற்படும்,' என்றார்.எண்ணெய் உற்பத்தியாளர் சாவி நாகராஜ், "எண்ணெய் வித்து உற்பத்தி அடியோடு

பாதித்துள்ளது. மின் தடையால் ஏற்கனவே பல எண்ணெய் ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இதை நம்பியுள்ள தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்றார்.

## உற்பத்தி குறைவால் தமிழகத்தில் அரிசி விலை ஏற்றம்

காரைக்குடி:தமிழகத்தின் அரிசி தேவை, கர்நாடகா டீலக்ஸ் பொன்னி மூலமே பெரும்பாலும், நிறைவேற்றப்படுகிறது. தற்போது கர்நாடகாவில் அறுவடை துவங்கி உள்ளதால், நூற்றுக்கும் மேற்பட்ட தமிழக லாரிகளில், நெல் லோடு ஏற்றி வரப்படுகிறது. நாள் ஒன்றுக்கு, 2,000 டன் நெல் கர்நாடகாவிலிருந்து, தமிழகத்துக்கு வருகிறது. தாராபுரம், காங்கேயத்துக்கு அதிக அளவிலும், காரைக்குடி புதுவயலுக்கு நாள் ஒன்றுக்கு, 20 லாரிகளிலும் நெல் வரத்து உள்ளது.

**போராட்டம்:**தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட்டதால், அம்மாநில அரசை கண்டித்து, விவசாய சங்கங்களும், கன்னட அமைப்புகளும் போராட்டம் நடத்தின. இதனால், லாரி போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டது. இதை காரணம் காட்டி, நெல் மூட்டைகள் ஏற்றி வரும் லாரிகளின் வாடகை உயர்த்தப்பட்டது. போராட்டம் முடிந்த நிலையிலும், உயர்த்தப் பட்ட வாடகையை லாரி உரிமையாளர்கள் குறைக்கவில்லை.இதனால், அரிசி விலை ஒரு டன்னுக்கு, 200 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

கடந்த வாரம், 1,440 ரூபாய்க்கு விற்ற ஒரு மூட்டை நெல் (60 கிலோ) தற்போது, 1,470 ரூபாயாக உயர்ந்துள்ளது.பொன்னி அரிசிமொத்த விலையில், 38 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ டீலக்ஸ் பொன்னி அரிசி, தற்போது, 39 ரூபாயாக உயர்ந்துஉள்ளது. இது சில்லரை விற்பனைக்கு வரும்போது, 45 ரூபாயாக உள்ளது. தொடரும் விலை உயர்வால், கர்நாடகா டீலக்ஸ் பொன்னி, வருகிற மார்ச் மாதத்துக்குள், 50 ரூபாயாக உயர்ந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

**மின்வெட்டு:**இது ஒரு புறம் இருக்க, மின்வெட்டு பிரச்னையாலும், நாளுக்கு நாள் அரிசி விலையை ஆலை உரிமையாளர்கள், உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.24 மணி நேரம் இயங்கிய அரிசி ஆலைகள், தற்போது, ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் மட்டுமே இயங்குகின்றன. ஜெனரேட்டர் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளன. மணிக்கு ஐந்து டன் அரைக்கும் மில்லுக்கு, 320 கே.வி., ஜெனரேட்டர் பயன்படுத்த வேண்டும். இதற்கு ஒரு மணி நேரத்துக்கு, 100 லிட்டர் டீசல் செலவாகிறது.

**அரிசி ஆலைகள்:**இந்த செலவும், அரிசி விலையில் தான் வைக்கப்படுகிறது. புதுவயல், பள்ளத்தூரில், 150க்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் இயங்கி வருகின்றன. மின்வெட்டால், மிஷின் பழுது உள்ளிட்ட பெரும் செலவுகளை சமாளிக்க முடியாமல், அவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.மொத்தத்தில், கடந்த டிசம்பர் மாதம், 22 ரூபாயாக இருந்த அரிசி விலை, தற்போது, 40 ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒரே ஆண்டில், 100 சதவீதம் விலை ஏறியது, இந்த ஆண்டில் தான்.அரிசி ஆலை உரிமையாளர் சங்க மாநில இணை செயலர் பி.எல்.படிக்காசு கூறியதாவது:

மின்வெட்டு, மழையின்மையால் வேளாண் உற்பத்தி குறைந்து உள்ளது. இந்நிலையில், விவசாயிகள் கையிருப்பில் உள்ள நெல்லை வெளியே எடுக்கவில்லை.நெல் இல்லாததால், அவற்றின் விலை நாளுக்குநாள் உயர்ந்து வருகிறது. அரவை ஆலைகளில், 100 மூட்டை நெல் அரைக்க, எட்டு மணிநேரம் ஆனது. தற்போது, 24 மணி நேரம் ஆகிறது. ஒரு ஷிப்ட் வேலை மூன்று ஷிப்டாக உயர்ந்துள்ளது. உற்பத்தி செலவு அதிகரித்து கொண்டே செல்கிறது. சிறிய அரிசி ஆலைகள் காணாமல் போய்விட்டன.

**டெல்டா மாவட்டங்கள்:**புதுவயல் அரிசி ஆலை உரிமையாளர் கிருஷ்ணன் கூறியதாவது: மழையின்மையால், தமிழக டெல்டா மாவட்டங்களிலிருந்து வரும், கல்சர் உள்ளிட்ட ரகங்களின் வரத்து இந்த ஆண்டு பாதியளவே இருக்கும் என, எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் புதுவயல், பள்ளத்தூர் மற்றும் தமிழக அரிசி ஆலைகள் கர்நாடக நெல்வரத்தை யே பெரிதும் நம்பியுள்ளன. தற்போதைய பிரச்னையால், லாரி வாடகை உயர்த்தப்பட்டு உள்ளது. இனி குறைக்கப்படுமா என்பது சந்தேகமே. இந்த விலை உயர்வு, அரிசியில் தான் வைக்கப்படும். மழை பெய்து, மண் சிரித்தால் மட்டுமே இதற்கு தீர்வு ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## நவீன தொழில் நுட்பத்தில் நான்கு மடங்கு எள் மகசூல் பெற யோசனை

கோபிசெட்டிபாளையம்: தை, மாசி பட்டத்தில் எள் சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி நான்கு மடங்கு மகசூல் அதிகரிக்கலாம். என கோபி வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தெரிவித்தார்.மேலும், அவர் கூறியதாவது:தமிழகத்தில், 2.5 லட்சம் ஏக்கரில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. சராசரி மகசூல் ஏக்கருக்கு, 100 முதல், 200 கிலோ வரை கிடைக்கிறது. சில எளிய தொழில் நுட்பங்கள் மூலம், நான்கு மடங்கு மகசூல் பெறலாம். தை, மாசி மற்றும் பங்குனி, சித்தரை பட்டம் இறவைக்கு ஏற்றதாகும்தை, மாசி பட்டத்தில் டி.எம்.வி., 3, 6, கோ 1, வி.ஆர்.ஐ., 1 பையூர் 1 ஆகிய ரங்களும், பங்குனி மற்றும் சித்திரை பட்டத்தில் டி.எம்.வி., 3, 4, 6, கோ 1, வி.ஆர், 1, எஸ்.வி.பி.ஆர்., 1 ஆகிய ரங்களும் பரிந்துரை செய்யப்படுகிறது.ஏக்கருக்கு இரண்டு கிலோ அனைத்து ரகங்களுக்கும் போதுமானதாகும். விதையை மணலுடன் கலந்து தூவ வேண்டும். விதை, மண் மூலம் பரவும் நோயை கட்டுப்படுத்த விதை நேர்த்தி அவசிமாகும். ஒரு கிலோ விதைக்கு கார்பன்டைசிம், இரண்டு கிராம் மருந்து கலக்க வேண்டும். விதை நேர்த்தி செய்து, 12 மணி நேரம் வைத்திருந்த பின் விதைக்க வேண்டும்.ஒரு ஏக்கருக்கு ஒரு பொட்டலம், 200 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பொட்டலம் பாஸ்போபேக்டீரியா விதையுடன் கலந்து விதைக்க வேண்டும். தழைசத்து பயிருக்கு கூடுதலாக கிடைக்க வழி வகுக்கிறது. உயிர் உரங்கள் விதையுடன் நன்கு கலக்க ஆறிய அரிசி கஞ்சியை சிறிது சேர்க்கலாம். முதலில் விதை நேர்த்தி செய்து விட்டு பிறகு அரை நாள் கழித்து, உயிர் உரங்களை கலந்து ஈரம் உலர்ந்தவுடன் விதைக்க வேண்டும். ஏக்கருக்கு இரண்டு கிலோ மாங்கனீசு சல்பேட்டை மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். நுண்ணூட்டம் எள் மகசூலை அதிகரிக்கவும், எண்ணெய் சத்தை கூட்டவும்

பயன்படுகிறது.செடிக்கு செடி ஒரு அடி இடைவெளியும், வரிசைக்கு வரிசை ஒரு அடி இடைவெளி இருக்க வேண்டும். விதைத்த, 15 வது நாளில் செடிக்கு செடி அரை அடி இடைவெளி இருக்கும் படியும், 30வது நாளில் செடிக்கு செடி ஒரு அடி இடைவெளி உள்ளவாறும் வைத்து மற்ற செடிகளை பிடுங்கிட வேண்டும்.

எள் பயிரில் பயிர் கலைத்தல் ஒரு முக்கிய பணியாகும். இவ்வாறு செய்யாவிட்டால் மகசூல் கணிசமாக குறையும் என்பதை விவசாயிகள் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு சதுர மீட்டர் பரப்பளவில், 11 செடிகள் இருப்பது அவசியமாகும். செடி கலைக்கும் போது வயலில் ஈரம் இருப்பது நல்லது.இறவை எள் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு, 14-9-9 தழை, மணி, சாம்பல் சத்துக்களை கொண்ட யூரியா, 30 கிலோ, சூப்பர், 55 கிலோ, பொட்டாஷ், 15 கிலோ ஆகிய உரங்களை இட வேண்டும். எள் பயிருக்கு அனைத்து உரங்களையும் அடி உரமாக இட வேண்டும்.

விதைத்த, 25ம் நாள், 35ம் நாளில் ஒரு முறை களை எடுக்க வேண்டும். களை எடுத்த பின் இரண்டு, முன்று நாள் கழித்து நீர் பாய்ச்சுவது நல்லது. விதைத்த, 20 நாளில் கொண்டைப்புழு தாக்குதல் தென்படும். இப்புழுக்கள் இலைகளை ஒன்றோடு ஒன்றாக பிணைத்து கொண்டு, அதில் இருந்து கொண்டு பூ, இளம் காய்கள் மற்றும் குருத்துகளை உண்ணுகின்றன. இதை வேப்பங்கொட்டை ஆறு கிலோவை இடித்து, ஒரு நாள் ஊற வைத்து, காதி சோப் கலந்து தெளிக்கலாம். நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூலை பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வாழைகளுக்கு இழப்பீடு "ஓராண்டாகியும் வேளாண்மை துறை "கொர் '

சத்தியமங்கலம்கடந்த ஆண்டு சத்தியமங்கலம் பகுதியில் ஏற்பட்ட சூறாவளி காற்றில் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு இதுவரை வேளாண்மை துறை சார்பாக இழப்பீடு கொடுக்கவில்லை. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.இந்தியாவின் முக்கிய தொழிலாக கருதப்படுவது விவசாயமாகும். மத்திய, மாநில அரசுகள் வரை விவசாயத்துக்கு முக்கியதுவம் கொடுக்கின்றனர். வங்கிகளில் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் கடனுக்கும் கூட மிக குறைந்த வட்டியே வசூலிக்கப்படுகிறது.இருப்பினும், இயற்கை சீற்றத்தால் விவசாய பயிர் பாதிக்கப்பட்டால் அதை வேளாண்மை துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகளை கொண்டு கணக்கிட்டு, அப்பயிருக்கு இழப்பீடு கொடுக்கும் திட்டத்தைகடந்த பல ஆண்டுகளுக்கு முன்னரே அரசு கொண்டு வந்தது.ஆனால் இயற்கை சீற்றத்தின்போது விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கு உரியமுறையில் இழப்பீடு சென்று சேர்வதில்லை. வேளாண்மை துறை அதிகாரிகளின் அலட்சியத்தால், இந்த இழப்பீடு கணக்கிடுவதுடன் நின்றுவிடுகிறது.சத்தியமங்கலம் அருகே உள்ள அரியப்பம்பாளையத்தை சேர்ந்த ரத்தினசாமி என்ற விவசாயி மற்றும் இதே ஊரை சேர்ந்த ஜோதி என்ற விவசாயிகளின் வாழை, கடந்த ஆண்டு திடீரென வீசிய சூறாவளி காற்றால் குலை தள்ளும் தருணத்தில் அடியோடு சாய்ந்தது. உடன் இந்த இரண்டு விவசாயிகளின் தோட்டத்தில், பாதிக்கப்பட்ட வாழைகளை கிராம நிர்வாக

அதிகாரி மற்றும் தாசில்தார் மற்றும் தோட்டகலைத்துறை அதிகாரிகள் வந்து ஆய்வு செய்தனர்.பாதிக்கப்பட்ட வாழைகள் குறித்து கணக்கெடுத்து இதற்கான இழப்பீட்டு தொகை காசோலையாக வரும், எனக் கூறி சென்று ஒராண்டு ஆகிவிட்டது. ஆனால் இதுவரை இந்த விவசாயிகள் இருவருக்கும் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு இழப்பீடு குறித்து எந்த தகவலும் இல்லை, என்கின்றனர்.தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் விசாரித்தபோது, "நாங்கள் பாதிப்பு குறித்து வேளாண்மை துறைக்கு அறிக்கை அனுப்பி விட்டோம். இனி மாவட்ட வேளாண்மை துறைதான் இழப்பீடு வழங்கும், என்று கூறுகின்றனர். ஆனால் ஒரு ஆண்டாகியும் இதுவரை எவ்வித இழப்பீட்டு தொகையும் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை.அரசு அறிவிக்கும் சலுகைகள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு சென்றடைய செய்வதே அரசு கண்காணிக்காததால், அதிகாரிகள் மெத்தனமாக செயல்படுகின்றனர். வேளாண்மை துறை அதிகாரிகள் விரைவாக, பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுத்தால்தான் அரசின் திட்டம் நிறைவேறும்.

**விவசாயிகளின் உயிருக்கு உலை வைக்கும் சந்தன மரம்**

ஈரோடு: "விவசாயிகளின் உயிருக்கு உலை வைக்கும் வகையில் சந்தன மர கடத்தல் அதிகரித்து விட்டது' என, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி கூறினார்.
கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமிக்கு சொந்தமான தோட்டத்தில் விளைந்திருந்த இரண்டு சந்தன மரங்களை வெட்டி, கடத்தி செல்ல முயற்சி நடந்தது. "சந்தன மரங்கள் விவசாயிகளின் உயிருக்கு உலை வைக்கிறது' என்கிறார் நல்லசாமி.மேலும், அவர் கூறியதாவது:வறட்சியை தாங்கி வளரும் மரம் சந்தன மரம். மேற்கு தொடர்ச்சி மலையிலும், தமிழகத்தின் சமவெளிகளிலும் இம்மரம் இயற்கையாக வளர்கிறது. பறவைகளின் எச்சம் மூலமாக இவ்விதை பரவி, மழை ஈரத்தைவைத்து நன்கு வளரும்.ஈரோடு மாவட்டத்தில் அறச்சலூர் பகுதியில் சந்தன மரங்கள் ஏராளமாக வளர்ந்துள்ளன. வளர்ந்து முதிர்ந்த இம்மரங்களை விவசாயிகள் வெட்டி விற்றதாக எங்குமில்லை. நள்ளிரவில் மர்மநபர்கள் இம்மரங்களை வெட்டி கடத்தி சென்று விடுகின்றனர். முதலில் மரத்தை ரம்பம் கொண்டு அறுக்கின்றனர். வெளிவரும் மரத்தூளில் சந்தன வாசம் இருந்தால், அறுத்து எடுத்து சென்று விடுகின்றனர். முதிர்ச்சி இல்லாவிட்
டால் பாதி அறுத்த நிலையில் விட்டு சென்று விடுகின்றனர்.மூன்று ஆண்டுக்கு முன், நசியனூரில் ராமசாமி என்பவரின் வீட்டுக்கு அருகில் வளர்ந்து வந்த ஒரு சந்தன மரத்தை அறுத்து கொண்டிருந்த திருடனை நோக்கி, உரிமம் பெற்ற துப்பாக்கியால் சுட்டு விட்டார். ஈ÷ராடு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட திருடன் தந்த வாக்குமூலத்தில், "நான் மரத்தை அறுத்துக் கொண்டிருந்த போது, தடுப்பதற்காக ஒருவர் வந்தார். அருகில் வந்தால் ரம்பத்தால் அறுத்து விடுவேன் என மிரட்டினேன்,' என்றார். சிகிச்சை பலனின்றி அவர் இறந்து விட்டார். இதற்காக,

தற்காப்புக்கு சுட்ட ராமசாமி மீது, கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜாமீனில் வெளிவந்த அவர், வழக்கை நடத்தி கொண்டிருக்கிறார்.கர்நாடகாவில் இதேபோல் சந்தன மரத்தை வெட்டியவரை துப்பாக்கியால் சுட்டவருக்கு பாராட்டும், பரிசும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மட்டும் கொலை குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சந்தன வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும், சுட்டுக்கொன்ற போலீஸாருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.தற்காப்புக்காகத்தான் துப்பாக்கி உரிமம் வழங்கப்படுகிறது, அரசு உணர வேண்டும். காடுகளில் இருக்கும் சந்தன மரங்களை காப்பாற்ற இந்த அரசால் முடியவில்லை. கோவை மாநகரின் மையப்பகுதியில் வனவியல் கல்லூரியில், வனத்துறை பாதுகாப்பு இருந்தும் கூட, சந்தன மரங்கள் திருடப்பட்டன. அரசால் காப்பாற்ற முடியவில்லை.சந்தன மரங்கள் திருட்டு போவதை அரசு தடுத்து நிறுத்தினால், விவசாயிகளே வெட்டி விற்கும் காலம் வந்தால், விவசாயிகளின் வாழ்க்கை தரம் உயரும். அரசுக்கு பெரியளவில் அன்னிய செலவாணி கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## 2.30 லட்சம் கால்நடைகளுக்குகோமாரி நோய் தடுப்பூசி

கோபிசெட்டிபாளையம்: கோபி கோட்டத்தில் மலைப்பகுதியில் கடுமையான பனிப்பொழிவாக உள்ளதால் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, 2.30 லட்சம் டோஸ் மருந்து போடப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் பாசன பகுதி மற்றும் மலைப்பகுதி அதிகளவில் உள்ளன. இச்சூழ்நிலைக்கு ஏற்ப மாடு, செம்மறி ஆடு, வெள்ளாடு உள்ளிட்ட கால்நடைகளை விவசாயிகள் ஆர்வமாக வளர்த்து வருகின்றனர்.ஈரோடு மாவட்டத்தில், 3.75 லட்சம் மாடுகள், 1.31 லட்சம் எருமைகள், 5.26 லட்சம் செம்மறி ஆடுகள், 4.45 லட்சம் வெள்ளாடுகள், 4.55 லட்சம் கோழிகள் உள்ளதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.இம்மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பனி பெய்து வருகிறது. மழை மற்றும் பனிக்காலங்களில் கால்நடைகளை கோமாரி நோய் அதிகளவில் தாக்குவது வாழக்கம்.கோபி கோட்டத்தில் உள்ள சத்தி, பவானி, பவானிசாகர், தாளவாடி, அந்தியூர், நம்பியூர், கோபி மற்றும் மழைப்பகுதிகளான குன்றி, பர்கூர், கடம்பூர், கெத்தேசால், தலமலை, மவேநத்தம் உள்பட, 180க்கும் மேற்பட்ட கிராமங்களில் லட்சக்கணக்கான கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. பனி காரணமாக ஒரு சில இடங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.கோபி கால்நடை துறை அதிகாரி கூறியதாவது:கோபி கோட்டத்தில் உள்ள சத்தி, பவானி மற்றும் கோபி தாலுகாவில் உள்ள கால்நடை மருத்துவமனை, கால்நடை கிளை மருத்துவமனை மற்றும் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் மூலம் குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், ஆர்.டி.வி.கே., தடுப்பு ஊசி, ஹெச்.எஸ்.வி., தடுப்பு ஊசி, ஈ.டி.வி., ஊசி போடப்படுகிறது. செயற்கை முறையில் கருவூட்டல், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் நீலநாக்கு நோயை கட்டுப்படுத்தும் தடுப்பூசி, கோமாரி தடுப்பு ஊசி போடப்படுகிறது.கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கினால்

வாயில் நுரை அதிகளவில் காணப்படும். கால்நடையில் நாக்கில் புண் தென்படும். சரியான உணவு சாப்பிட முடியாமல் இருக்கும். கோமாரி நோய் தடுக்கும் வகையில் கோபி கோட்டத்தில், 2.30 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தடுப்பூசி போடப்பட்டுள்ளதால் கோமாரி தாக்கி இருக்க வாய்ப்பில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகத்தில் ரசாயன உர பயன்பாடு இறங்குமுகம்

கோபிசெட்டிபாளையம்: தமிழகத்தில் பருவமழை இன்மை, ரியல் எஸ்டேட் பரப்பு அதிகரிப்பு போன்ற காரணத்தால், நடப்பாண்டு ரசாயன உரங்கள் பயன்பாடு குறைந்துள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை, டெல்டா பாசனம் மூலம், சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை என, 11 மாவட்டங்களில், 12.5 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.பவானிசாகர் அணை மூலம் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதிகள், எல்.பி.பி., வாய்க்கால், காலிங்கராயன் பாசனங்கள் மூலம், 1.50 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி, மானாவாரி பயிர்கள், பயறு வகைகள் என, ஆண்டுக்கு இருபோகம் சாகுபடி செய்யப்படுகிறது.பாசன பகுதிகளில் மண் அமைப்புக்கு ஏற்றவாறு, தழை, மணி, சாம்பல் சத்து அடங்கிய என்.பி.கே., உரம், யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், டி.ஏ.பி., மற்றும் சல்பேட், கலப்பு உரங்கள் போன்ற உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.தமிழகத்தில், ஆண்டுக்கு, 1.70 லட்சம் டன் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகிறது. பரிந்துரைக்கப்பட்டதை விட தேவைக்கு அதிகமாக ரசாயன உரம் பயன்படுத்துவதில், ஈரோடு, சேலம், திருச்சி, கோவை மாவட்டங்கள் முன்னிலையில் உள்ளன.தேவைக்கு அதிகமாக உரம் பயன்படுத்தப்படுவதை குறைக்கவும், மண்ணில் உள்ள சத்துக்களை அறிந்து அதற்கேற்ப உரமிட, அனைத்து விவசாயிகளும் மண் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.கடந்த, இரண்டு ஆண்டுகளாக ஈரோடு மாவட்டத்தில், 43 ஆயிரம் மண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. ரியல் எஸ்டேட் அதிகரிப்பு, பருவமழை இன்மையால், நடப்பாண்டு பாசனப்பரப்பு குறைந்து விட்டது. தமிழகத்தில்,1.23 லட்சம் டன் உரம் பயன்படுத்தப்பட்டுள்ளன.வேளாண் தரக்கட்டுபாட்டு அலுவலர் ஒருவர் கூறியதாவது:தமிழகத்தில் ஆண்டுக்கு, 1.70 லட்சம் டன் ரசாயன உரம் பயன்படுத்தப்பட்டன. ரசாயன உரங்கள் பயன்படுத்துவதில், ஈரோடு, சேலம், திருச்சி, கோவை மாவட்டங்கள் முன்னிலையில் உள்ளன. மண் பரிசோதனை, இயற்கை உரங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் சென்ற இரண்டு ஆண்டுகளில், 43 ஆயிரம் மண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.பவானியில் உள்ள இயற்கை உர கிடங்களில் இருந்து, ஈரோடு, நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில், 15 ஆயிரம் பொட்டலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மண் பரிசோதனை, இயற்கை உரங்களின் பயன்பாடு அதிகரிப்பால், தமிழகத்தில் நடப்பாண்டு,

1.23 லட்சம் டன் உரம் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

**தேயிலை வர்த்தகத்தில் 103 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் :ஆண்டின் முதல் 11 மாதங்களில் திருப்தி**

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏல மைய வர்த்தகத்தில் இந்தாண்டின் முதல் 11 மாதங்களில், கடந்தாண்டை காட்டிலும் 103.2 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது. குன்னூர் கோத்தாரி வேளாண்மை மேலாண்மை மையத்தில் நடந்த கருத்தரங்கில், சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் பேசியதாவது: நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் வாரந்தோறும் குன்னூர் தேயிலை ஏல மையம் மூலம் விற்கப்படுகிறது. இந்தாண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை தேயிலை வர்த்தகத்தில் ஏற்பட்ட ஏறுமுகம், கடந்த 11 மாத மொத்த வருமானத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 11 மாதங்களில் 48 ஏலம் நடந்துள்ளன; மொத்தம் 5.13 கோடி கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டுள்ளது; சராசரி விலை கிலோவுக்கு 81.20 ரூபாயாக இருந்தது. கடந்தாண்டின் (2011) முதல் 11 மாதங்களில் 4.94 கோடி கிலோ தேயிலை விற்கப்பட்டு, சராசரி விலையாக கிலோவுக்கு 63.47 ரூபாய் பெறப்பட்டுள்ளது. நடப்பாண்டின் முதல் 11 மாதங்களில் 416.56 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது; கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 313.54 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டின் முதல் 11 மாதங்களில் 19 லட்சம் கிலோ தேயிலை தூள் கூடுதலாக விற்கப்பட்டு, 103.02 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.தேயிலை விலை உயர்வுக்கு, உள்நாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் கொள்முதல் செய்ததே காரணம். இவ்வாறு, சுந்தர் பேசினார்.

**அரவையில் ரூ.5.69 கோடியில் வளர்ச்சிபணி : அமைச்சர் துவக்கம்**

கரூர்: அரவக்குறிச்சி சட்டசபை தொகுதியில், ஐந்து கோடியே, 69 லட்சம் ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்டப்பணிகளை, தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கிவைத்தார்.கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி சட்டசபை தொகுதியில், 5 கோடியே, 69 லட்ச ரூபாய் ரூப 0ய் மதிப்பில், பல்வேறு நலத்திட்டப்பணிகள் துவக்க விழா நேற்று நடந்தது. விழாவில், அரவக்குறிச்சி தொகுதி, க.பரமத்தி பஞ்சாயத்து யூனியன், வேலாயுதம்பாளையம், கவுண்டன்புதூரில், 14 லட்சத்து, 88 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தார்ச்சாலை, சின்ன நாயக்கனூரில், 20 லட்சத்து, 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தார்ச்சாலை,அரவக்குறிச்சி டவுன் பஞ்சாயத்தில், நபார்டு திட்டத்தின் கீழ், கொத்தப்பாளையம் ரோடு முதல், வெங்ககல்குட்டை காலனி வரை, 42 லட்ச ரூபாய் மதிப்பில் தார்ச்சாலை, அரவக்குறிச்சி ஜீவா நகர் முதல், தாராபுரம் ரோடு வரை, 35 லட்ச ரூபாய் மதிப்பில் தார்ச்சாலை, 50 லட்ச ரூபாய் மதிப்பில் டி.எஸ்.பி., அலுவலகம் முதல், அன்பு சில்க்ஸ் வரை, வடிகால் வசதி மற்றும் தார்ச்சாலையை பலப்படுத்துதல் ஆகிய பணிகளை

அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.மேலும், புங்கம்பாடி ரோடு முதல், வெங்கமேட்டுபுதூர் வரை, 26 லட்சத்து, 66 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தார்ச்சாலை அமைத்தல், பள்ளப்பட்டி டவுன் பஞ்சாயத்து பகுதிகளில் வடிக்கால் வசதி, புதிய தார்ச்சாலை, பழைய தார்ச்சாலைகளை சீரமைத்தல் உள்ளிட்ட பணிகளை, ஐந்து கோடியே, 69 லட்சத்து, 44 ஆயிரம் ரூபாய் மதிப்பில், போக்குவரத்து துறை அமைச்சர் செந்தில்பாலாஜி நேற்று துவக்கி வைத்தார். டி.ஆர்.ஓ., கிறிஸ்துராஜ், கரூர் ஆர்.டி.ஓ., நெல்லை வேந்தன், மாவட்ட பஞ்சாயத்து துணைத்தலைவர் மார்க்கண்டேயன், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் திருவிகா, ராதா, டவுன் பஞ்சாயத்து தலைவர்கள் சையது இப்ராஹூம், மணிகண்டன், பி.டி.ஓ .,க்கள் நாகராஜ், ஜெகதீசன், செய ல் அலுவலர்கள் உமாராணி, சுப்ரமணி உள்பட பலர் வளர்ச்சிப்பணிகள் துவக்கவிழாவில் பங்கேற்றனர்.

## எள் மூட்டை விலை உயர்வு :கி.புரம் விவசாயிகள் மகிழ்ச்சி

லாலாப்பேட்டை: எள் மூட்டைக்கு திடீரென விலை உயர்வு ஏற்பட்டதால், எள் பயிரிட்டுள்ள கிருஷ்ணராயபுரம் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்குட்பட்ட வயலூர், பஞ்சப்பட்டி, பாலப்பட்டி, மத்திப்பட்டி, புனவாசிப்பட்டி, புதுப்பட்டி, சிவாயம், பாப்பக்காப்பட்டி ஆகிய பகுதிகளில் மணவாரி பயிரான, எள் சாகுபடி செய்யப்பட்டது. போதிய அளவிலான மழை இல்லாததால், சரியான முறையில் எள் செடிகள் வளர்ச்சி அடையாமல் பாதிப்பு ஏற்பட்டது.குறைந்த அளவில் சாகுபடி செய்யப்பட்ட எள் செடிகளை, அறுடை செய்யும் பணிகள் தற்போது நடந்து வருகிறது. இந்நிலையில், வரத்து குறைந்ததால் ஒரு ஏக்கர் பரப்பளவில் விளைந்த ஒரு மூட்டை எள்ளுக்கு, 1,500 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. கடந்தாண்டு இதே மூட்டை விலை, 5,500 ரூபாய் வரை விற்றது. இதன் மூலம், எள் சாகுபடி குறைந்து விட்ட நிலையில், விலை அதிகரிப்பால், சாகுபடியின் போது ஏற்பட்ட இழப்பை செய்து கொள்ள முடியும்' என, எள் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## விவசா யிகள் குறைதீர்கூட்டம் : 20ல் நடப்பு

பெரம்பலூர்: "மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும், 20ம் தேதி நடக்கிறது' என, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ் அஹமது தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும், 20ம் தேதி காலை, 11 மணிக்கு, கலெக்டர் தலைமையில் நடக்கிறது. விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாய பணிகள் தொடர்பான பாசன ஏரி, வாய்க்கால்கள் தூர்வாருதல், வங்கி கடனுதவி, உரம், வேளாண்மை இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும்.எனவே, இக்கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று குறைகளை தெரிவித்து பயன்பெறலாம். கூட்டத்தில்

அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் பங்கேற்று விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர். ஆகையால் பெரம்பலூர் மாவட்ட விவசாயிக ள் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன் பெறலாம்.

**வேளாண் இயந்திரம் வாங்கவிவசாயிகளுக்கு மானியம்**

தஞ்சாவூர்: "விவசாய இயந்திரங்கள் வாங்க, விவசாயிகளுக்கு மானிய உதவி அரசு சார்பில் வழங்கப்படுகிறது' என, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ், பவர் டிரில்லர், நெல் நடவு இயந்திரம், கதிர் அறுக்கும் இயந்திரம், பலவகை கதிர் அடிக்கும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், விதை விதைக்கும் இயந்திரம், கைத்தெளிப்பான், தேங்காய் மட்டை உரிக்கும் இயந்திரம் போன்றவை, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இதர விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.இதற்காக தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு, 25 லட்சத்து, 68 ஆயிரம் ரூபாயும், இதர விவசாயிகளுக்கு, ஒரு கோடியே, 53 லட்சத்து, 35 ஆயிரம் ரூபாயும் அனுமதித்து அரசு உத்தரவிட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, 60 சதவீதம் மானியம் வழங்கப்படும். இதுதவிர டிராக்டர், பவர், டில்லர் மற்றும் ரோட்டவேட்டர் போன்ற, 285 இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழ ங்குவதற்காக, ஒரு கோடியே, 23 லட்சத்து, 25 ஆயிரம் ரூபாய் நிதியை அனுமதித்து அர சுஉத்தரவிட்டுள்ளது. புதிய திட்டத்தில் இயந்திரங்களை வாங்க தஞ்சை, குட ந்தை, பட்டுக்கோட்டையிலுள்ள வேளாண்மை உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களை விவசாயிகள் அணுகி, பயன் பெறலாம்.

**வறட்சியை தாங்கி நெற்பயிர் வளரதஞ்சையில் புதியமுறை அறிமுகம்**

தஞ்சாவூர்: டெல்டா மாவட்டங்களில், அதிக நெல் சாகுபடி பெற உதவும் வகையிலும், வறட்சியை தாங்கும் வகையிலும், தெளிப்பான் மூலம் உயிரி உரம் கலந்த நீர் கரைசல் தெளிக்கும், புதிய தொழில்நுட்பத்தை விவசாயிகளிடம் வேளாண் துறை

அறிமுகப்படுத்தியுள்ளது.காவிரிகைவிரித்து, மழையும் பொய்த்து போனதால், டெல்டா மாவட்டங்களில் விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை நிலவும், தற்போதைய இக்கட்டான சூழலில், நெற்பயிர்கள் வறட்சியை தாங்கும் வகையில் புதிய நீர் கரைசல் தெளிக்கும் முறை யை வேளாண்துறை அறிமுதல் செய்துள்ளது. புதிய முறை மூலம், 15 நாட்கள் வரை பயிர்க ள் வறட்சியை தாண்டி வளரும். அதிக மகசூல் பெற முடியும். எனவே, புதிய தொழில்நுட்பம் குறித்து விவசாயிகள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என, தஞ்சை மாவட்ட வேளாண்துறை அறிவித்தது.இதையடுத்து, தஞ்சை அருகே சக்கரசாமந்தம் பகுதியில், நெற்பயிர்களுக்கு உயிர் உரம் கலந்த நீர் கரைசல் தெளிக்கும் புதிய தொழில்நுட்ப அறிமுக நிகழ்ச்சி நடந்தது. இதில், பஞ்., தலைவர் ஸ்ரீதேவி வரவேற்றார். டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார் துவக்கி வைத்தார்.வேளாண் இணை இயக்குனர் முகமது யாகியா, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராமன், மண்

மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் ரெங்கராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சொக்கலிங்கம், பூச்சியியல்துறை பேராசிரியர் செங்குட்டுவன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பயிர்களை காக்க தண்ணீர் வரும்நம்பிக்கையில் உர விற்பனை அதிகரிப்பு**

கும்பகோணம்: சம்பா பயிர்களை காக்க தண்ணீர் வரும் என்ற நம்பிக்கையில், கும்பகோணம் பகுதியில் உரமூட்டைகள் விற்பனை வேகமாக நடந்து வருகிறது.

கும்பகோணம் பகுதியை சுற்றி, பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் சம்பா பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இந்த பயிர்களுக்கான உரங்கள், பல்வேறு வெளிநாடுகளிலிருந்து அரசு இறக்குமதி செய்து, அரசு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் இருப்பு வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தனியாரிடம் விற்க அனுமதி கொடுத்தால், பதுக்கி வைத்து வைக்கும் நிலை ஏற்படும் என்பதனால், இந்த முறையை கடைபிடித்து வருகிறது.ஆனால் தற்போது கும்பகோணத்தை சுற்றி உள்ள, 68 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில், ரசாயான டி.ஏ.பி., பொட்டாஷ், யூரியா போனற உரங்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. முடியும் தருவாயில் சம்பா பயிர்களின் சாகுபடி காலம் உள்ளதால், தற்போது உர விற்பனை வேகமாக நடந்து வருகிறது.இருந்தாலும் இதுவரை உரம் விற்பனை குறைவாக விற்பனையானதுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. உரம் விலை மிக அதிகமாக இருப்பதோடு, தண்ணீர் பற்றாக்குறை, மின்சார தட்டுப்பாடு காரணமாக பம்பு செட்டுக்கள் இயங்காதது, ஆள் பற்றாக்குறை, பண பற்றாக்குறை என பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.ஆனால், கும்பகோணத்தில் தற்போது சம்பா பல இடங்களில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இந்த பயிர்கள் தற்போது கதிர் வரும் தருவாயில் உள்ளது. இந்த பயிர்களுக்கு இதுவரை, நான்கு உரங்கள் வரை விவசாயிகள் அளிக்க வேண்டும். ரசாயன உரங்கள் இடும்போது கட்டாயமாக வயல்களில் தண்ணீர் இருக்கவேண்டும். அப்போதுதான் ரசாயன உரங்கள் காற்றில் உள்ள பல்வேறு சத்துக்களை இழுத்து பயிர்களுக்கு கொடுக்கும்.ஆனால் உர இடும்முறைகளின் போது பயிர்களில் தேவையான அளவு தண்ணீர் இல்லாததனால், உரம் இட முடியவில்லை. தற்போது உள்ள சூழ்நிலையில் உச்சநீதிமன்றம் அளித்த உத்தரவாத தீர்ப்பு, கர்நாடகா அரசு காவிரி தண்ணீரை அளிக்க முன்வரும் சூழல், தண்ணீரை பெற தமிழக முதல்வர் எடுத்துவரும் ஆக்கப்பூர்வமான முயற்சி ஆகியவற்றறை பார்த்தால், தற்போது ஜனவரி மாத இறுதிவரை தண்ணீர் கிடைக்கும் என்று சூழ்நிலை உள்ளது.அதனால் உரம் வாங்கி போட்டால் ஒரளவு பயிரை தரமாக கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையோடு, விவசாயிகள் தற்போது உரம் வாங்கி வருகின்றனர். கும்பகோணம் நகர்பகுதியில்அருகில் உள்ள தாராசுரம் தொடக்க வேளாணமை கூட்டுறவு வங்கியில் அதிக அளவு உரம் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை நடந்து வருகிறது

## நெல் சாகுபடியில் மகசூல் சரிவு பம்பர் மகசூல் என்னாச்சு ...

கம்பம்:கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் சாகுபடியில், கடந்த ஆண்டு கிடைத்த பம்பர் மகசூல், இந்த ஆண்டில் கிடைக்காததால், பலத்த சரிவை விவசாயிகள் சந்தித்துள்ளனர்.
கம்பம் பள்ளத்தாக்கில், 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக சாகுபடி செய்யப்படுகிறது. தஞ்சைக்கு அடுத்தாற்போல், அதிக பரப்பில் நெல் விவசாயம் இப்பகுதியில் தான் மேற்கொள்ளப்படுகிறது. முல்லைப் பெரியாறு பாசனத்தில் மேற்கொள்ளப்படும் இருபோக சாகுபடியில், கடந்த சில ஆண்டுகளாக வீரிய ஒட்டுரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு, திருந்திய நெல் சாகுபடி முறையில் பம்பர் மகசூல் எடுத்து வருகின்றனர்.
கடந்த ஆண்டு சின்னமனூர், கம்பம் பகுதியில் ஏக்கருக்கு 4 டன்னுக்கு மேல் பலன் எடுத்தனர். நடப்பு ஆண்டில் முடிந்த முதல் போக அறுவடையில், நெல் மகசூல் கடும் சரிவை சந்தித்துள்ளது. ஏக்கருக்கு 3 டன் மட்டுமே கிடைத்துள்ளது. மகசூல் குறைவு விவசாயத்துறையினரை அதிர்ச்சியடைய செய்துள்ளது. மாவட்ட இணை இயக்குநர் சுந்தரம் கூறியதாவது:
தென் மேற்கு பருவ மழை பொய்த்ததால், மகசூல் குறைந்துள்ளது. இன்னும் அறுவடை முடியவில்லை. முடிந்த பின் தான் முழுமையான நிலவரம் தெரியும்.இந்த ஆண்டு மகசூல் கொஞ்சம் குறையலாம்' என்றார்.

## 30 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் இளையான்குடியில் விவசாயம் பாதிப்பு

இளையான்குடி: இளையான்குடி தாலுகாவில் மழை பெய்யாததால்,30 ஆயிரம் ஏக்கரில் பயரிடப்பட்ட நெல் பயிர் தண்ணீரின்றி கருகுகிறது. விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கும், இதர
வங்கிகளுக்கும் அலைகின்றனர்.
இளையான்குடி தாலுகாவில் இளையான்குடி, தாயமங்கலம்,
திருவுடையார்புரம், சாலைக்
கிராமம், சூராணம் உள்பட தாலுகா முழுவதும் 30 ஆயிரம் ஏக்கரில்
விவசாயிகள் நெல் விவசாயம்
செய்திருந்தனர்.
இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதால் கண்மாய்களில் குறைந்த அளவு தண்ணீர் மட்டுமே இருந்தது. இதை வைத்து விவசாயிகள் விவசாயப்பணிகளை துவங்கினர். மழை பொய்த்து போனதால் , கண்மாயில் இருந்த குறைந்த தண்ணீரையும் "பம்பு செட் ' மூலம் "முறை ' வைத்து பாய்ச்சி காலி செய்து விட்டனர்.
தற்போது தண்ணீர் இல்லாமல் நெல் பயிர்கள் கருகி வருகின்றன. விவசாயப்பணிகளுக்காக தொடக்க கூட்டுறவு வங்கிகள், தனியார் மூலம் வாங்கிய கடனை செலுத்த வழியில்லாமல் விவசாயிகள்

கவலையில் உள்ளனர்.

அரசு வறட்சி பகுதியாக அறிவித்து நிவாரணம் வழங்கும் என்ற எதிர்பார்ப்போடு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

களிலும், இதர வங்கிகளிலும் விவசாயிகள் பல மணி நேரம் காத்திருந்து பயிர் காப்பீடு செய்து வருகின்றனர்.

விவசாய சங்க தாலுகா செயலாளர் அழகர்சாமி கூறுகையில்

"தாலுகாவில் மழை இல்லாமல் பயிர்கள் கருகிவிட்டது. உழவு, உரம், களையெடுப்பு என விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரத்திற்கும் மேல் செலவு செய்துள்ளனர்.

பயிர் காப்பீடு செய்தால் ஒரு

ஏக்கருக்கு 5 ஆயிரத்து 107 வழங்கப்

படும் என விவசாய காப்பீட்டு

நிறுவனம் அறிவித்துள்ளது.

அரசு வறட்சி பகுதியாக

அறிவித்து, ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்க

வேண்டும் ' என்றார்.

## துல்லிய பண்ணையம் ஆய்வு

சிவகங்கை:கொங்கரத்தியில்,

துல்லிய பண்ணையம் முறையில், நடவுசெய்த கத்தரி செடிகளை,

கலெக்டர் ஆய்வு செய்தார்.

அவர் கூறுகையில்,""இத்திட்டத்தில்,

கத்தரி பயிரிடும் விவசாயிகளுக்கு, எக்டேருக்கு சொட்டு நீர் பாசனத்திற்கு மானியம் ரூ.48,640, உரங்

களுக்கு 15 ஆயிரம் ரூபாய், வழங்கப்படும்," என்றார்.

விவசாய இணை இயக்குனர் செல்லத்துரை,

கல்லல்ஒன்றிய தலைவர் அசோகன் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்கு கலப்பை வினியோகம்

கல்லல்:கல்லல் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு, தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் ஆதிதிராவிட விவசாய குழுக்

களுக்கு உழுவான்,சுழல் கலப்பைகள் வழங்கப்பட உள்ளது. 15 நபர்களை ஒருங்கிணைத்து கூட்டுறவு விதிப்படி பதியப்பட்ட குழுக்களுக்கு, விவசாய பொறியியல் துறை மூலம், பயிற்சி அளித்து

இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளன. விவசாயிகள் பயன்பெறலாம், என, உதவி இயக்குனர் கணேசன் தெரிவித்தார்.

**விவசாயிகள் பாங்க் கடனை ரத்து செய்ய காங்., கோரிக்கை**

தென்காசி : விவசாய்களின் பாங்க் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென காங்., சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து மத்திய நிதி அமைச்சர் சிதம்பரத்திற்கு வடகரை நகர காங்.,தலைவர் ராமர் அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:- தமிழகத்தில் நடப்பு ஆண்டு துவக்கம் முதல் விவசாயிகள் பாங்கில் விவசாய கடன்கள் பெற்றுள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன்வரை உரிய தண்ணீரின்றி கார், பிசான சாகுபடி பணிகளை மேற்கொள்ள முடியாமல் தவிர்த்து வந்த நிலையில் வாழ்வின் ஜீவாதாரத்திற்கே மிகவும் அல்லல்பட்டு வருகின்றனர். எனவே விவசாயிகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு புத்தாண்டு பரிசாக விவசாயிகள் பாங்குகளில் பெற்ற விவசாய கடன்களை ரத்து செய்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும். இவ்வாறு அவர் மனுவில் கூறியுள்ளார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

16.12.2012 P.M

17.12.2012 A.M

## சம்பா நெல் பயிருக்கு இழப்பீடாக ஏக்கருக்கு ரூ.40,000 தர வேண்டும்



திருச்சி: தொடர்ந்து மின்தடை, தண்ணீர் பற்றாக்குறை போன்ற காரணத்தால் கருகும் சம்பா பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என அனைத்து விவசாய சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.மேட்டூர் அணை திறக்காததால், தமிழகத்தில் நடப்பாண்டு குறுவை சாகுபடி நடக்கவில்லை. சம்பா பயிரை காப்பாற்ற மேட்டூரில் போதுமான தண்ணீரும் இல்லை. கர்நாடகா அரசும் தண்ணீர் திறந்துவிட மறுத்து பிடிவாதம் பிடிக்கிறது. அந்த அரசை தட்டிக் கேட்டும் நிலையில் மத்திய அரசும் இல்லை. இதனால் திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர், புதுகை, பெரம்பலூர், கரூர், ஈரோடு, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள 18 லட்சம் ஏக்கர் சம்பா பயிர்கள் கொஞ்ச, கொஞ்சமாக கருகத் தொடங்கி உள்ளன. நிர்ப்பந்தம் செய்து, இனிமேல் கர்நாடகா அரசு தண்ணீர் திறந்து விட்டாலும்கூட தமிழகத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா பயிர்களை காப்பாற்ற முடியாது. எனவே கருகும் சம்பா பயிர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் என விவசாயிகள் சங்கத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறுவையை தொடர்ந்து சம்பா: தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ராஜா சிதம்பரம் கூறுகையில், குறுவையை தொடர்ந்து சம்பா சாகுபடி செய்வதற்கு தண்ணீர் மற்றும் மின்சாரம்

கிடைக்க உத்தரவாதம் இல்லாததால் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற் பயிர்கள் காய்ந்து கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே மத்திய, மாநில அரசுகள் தமிழக விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு நஷ்டஈடாக ரூ.40 ஆயிரத்தை வழங்கி, விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.பாதித்த விவசாயிகள் கணக்கெடுப்பு: காவிரி நீர்பாசன விவசாயிகள் சங்க செயல் தலைவர் ராஜாராம் கூறுகையில், Ôகுறுவை இழந்து, தற்போது சம்பாவையும் இழந்து விவசாயிகள் தவித்து வருகின்றனர். முறைப்படி கணக்கெடுத்து அவர்களுக்கு நஷ்டஈடாக ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வழங்க வேண்டும் என்றார்.வாடிய பயிர்களை காக்க தண்ணீர் தேவை: பாரதீய கிசான் சங்க தலைவர் அய்யாக்கண்ணு கூறுகையில், தொடர் மின்வெட்டு, தண்ணீர் இல்லாததால் சம்பா பயிர் கருகி வருகிறது.  குறைந்த பட்சம் 60 நாட்களுக்கு நீர் திறந்து விட்டால்தான் பயிர்களை காப்பாற்ற முடியும் என்றார்.

தொடருது தற்கொலை: வாரிசுகளுக்கு வேலை

டெல்டா விவசாயிகள் வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியாது என்பதால் வாழ்வதை விட சாவதே மேல் என்ற எண்ணத்தில் நாகை விவசாயி ராஜாங்கம் உள்பட 5க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளதால் தமிழர்களின் உயிரும், சம்பா பயிரும் இப்போது சாவின் விளிம்பில் இருக்கிறது. காவிரி டெல்டா பகுதிகளில் காய்ந்து போன நிலங்களை காண சகிக்காமல் தற்கொலை செய்த ஏழை விவசாயிகளின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**தொடக்க வேளாண்மை சங்கத்திற்கு பயிர்க்கடன் வழங்க ரூ.3 கோடி ஒதுக்கீடு**

ஈரோடு, : சத்தியமங்கலம் அருகே வேடச்சின்னனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கோபி சரக துணைப்பதிவாளர் அகஸ்டின் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் தாலுக்காவிற்குட்பட்ட வேடச்சின்னானூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாக உறுப்பினர் கல்வி திட்ட முகாம் நிகழ்ச்சி நடந்தது. கோபி சரக துணைப்பதிவாளர் அகஸ்டின் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது: இந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் கடந்த 2 ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு தொடர்ந்து 100 சதவீதம் கடன்களை வசூல்

செய்துள்ளது. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு பயிர் செய்ய பயிர்க்கடன் வழங்க 3 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை 220 விவசாயிகளுக்கு 2 கோடியே 26 லட்ச ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. பயிர்க்கடன் மட்டுமின்றி மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடனும் வழங்கப்பட்டு வருகிறது. அவசர தேவைக்கு நகைக்கடனும், சிறுவணிக கடன், மத்திய காலக்கடன்களும் வழங்கப்படுகிறது. நகர்புறத்தில் கிடைக்கும் சேவைகள் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கும் கிடைக்கும் வகையில் பொதுசேவை மையம் தொடங்கப்பட்டு விவசாயிகளுக்கு பட்டா, சிட்டா உட்பட பொதுமக்களுக்கு ரயில், விமான டிக்கெட், புகைப்படம், ஜெராக்ஸ் எடுக்கும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு அறிவித்த கிடங்கு வசதி திட்டத்தில் முழு மானியத்துடன் 11 லட்ச ரூபாய் செலவில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டு வருகிறது. இதன் மூலமாக விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு விலை கிடைக்காதபோது இருப்பு வைத்துக் கொள்ளவும், அதன்பேரில் சரக்கீட்டு கடன் பெற்றுக் கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது' என்றார்.

இந்த நிகழ்ச்சியில் சங்கத்தின் மூத்த உறுப்பினர் வரதராஜன், முன்னாள் தலைவர் சுந்தரமூர்த்தி, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் செங்கோடப்பன், கூட்டுறவு பிரச்சார அலுவலர் ஆனந்தராஜ், சத்தி கள அலுவலர் ரங்கராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக சங்கத்தின் தனி அலுவலர் ஜான்டேவிட் வரவேற்றார்.

முடிவில் சங்க செயலாளர் சாரதாமணி நன்றி கூறினார்.

## விதை உற்பத்தி குறித் து விவசாயிகளுக்கு பயிற்சி

சேலம், : சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி வட்டாரம் மாட்டையாம்பட்டி கிராமத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் பயிறு வகைகளில் தரமான விதை உற்பத்தி செய்வது தொடர்பான விவசாயிகளுக்கு முதல் கட்ட பயிற்சி நடந்தது.

வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். சேலம் விதை சான்று உதவி இயக்குனர் ராஜாதுரை கலந்து கொண்டு, விதைகளின் பல்வேறு நிலைகள், அவைகளை உற்பத்தி செய்யும் முறைகள், குணாதிசயங்கள், சுத்திகரிப்பு செய் தல், சான்று அளிப்பு செய்தல் குறித்து விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை அலுவலர்கள் ஜெகநாதன், அர்த்தனாரிஸ்வரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண்மை அலுவலர் வெங்கிடு நன்றி கூறினார்.

## அட்மா ' உழவர் நண்பர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் விழா

சேலம், : அயோத்தியாப்பட்டணம் வட்டாரத்தில் 'அட்மா' உழவர் நண்பர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் செல்லதுரை தலைமை வகித்து வேளாண் தொழில்நுட்ப செய்திகள் மற்றும் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பேசினார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் கண்ணன் முன்னிலை வகித்து தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கினார். நிகழ்ச்சியில் அட்மா உழவர் நண்பர்கள் 26 நபர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

வேளாண்மை அலுவலர் நவநீத கிருஷ்ணன் கிராமங்களில் பயிர்களின் நிலை, பூச்சி நோய் தாக்குதல் விவரம் குறித்து உழவர் நண்பர்களிடம் கேட்கப்பட்டது. பயிர் நிலைகளில் நிலவும் பூச்சி நோய்கள் மற்றும் கட்டுப்பாடு பற்றி விவரித்தார். அட்மா திட்ட மேலாளர் செல்வி, தொழில்நுட்ப வல்லுநர் பிரியா, திட்ட அலுவலர்கள் செல்வி, பிரியா, சக்கரவர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அறிவிப்பி ன்றி பராமரிப்பு பணி : விவசாயிகள் பாதிப்பு

விழுப்புரம், : தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த கோரி இன்று (17ம் தேதி) டாஸ்மர்க் கடைகளுக்கு பூட்டு போடும் போராட்டத்தை பாமக அறிவித்தது இருந்தது.

இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாமக நிர்வாகிகளை கைது செய்ய மாவட்ட காவல் துறை முடிவு செய்தனர். அதன்படி விழுப்புரத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் அரிகரன், மாவட்ட தலைவர் துரைமுருகன், ஒன்றிய செயலாளர் சீனுவாசன், இளைஞரணி ராஜா மற்றும் ஒன்றிய நகர நிர்வாகிகள் உட்பட மாவட்டம் முழுவதும் 88 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திண்டிவனத்தில் மாவட்ட செயலாளர் மலர்சேகர், முன்னாள் மாவட்ட செயலாளர் ஏழுமலை, நகரமன்ற உறுப்பினர் சந்திரன், மாவட்ட துணைத்தலைவர் ராமலிங்கம், ஒலக்கூர் ஒன்றியத்தில் ஆதிமூலம், முருகன், ஆதிநாராயணன் ஆகிய 7 பேரை போலீசார் கைது செய்தனர்.

வானூர் ஒன்றியத்தில் மாவட்ட தலைவர் சங்கர், நகர செயலாளர் கோவிந்தன், தொழிலாளர் அணி தலைவர் அன்பழகன், கிளை செயலாளர் அறிவுமணி ஆகிய 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

விக்கிரவாண்டியில் நகர பாமக நிர்வாகிகள் அரிகரன் (45), கவுன்சிலர் ராஜா (33), ஒன்றிய செயலாளர் சீனுவாசன் (40) ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

திருக்கோவிலூர் பகுதியில் மாவட்ட தலைவர் செழியன், ஏழுமலை, முருகன், ராஜவேல்,

ராமச்சந்திரன், ரகோத்தமன், சக்திவேல் ஆகிய 7 பேர் கைது செய்யப்பட்டனர். மேல்மலையனூர் பகுதியில் மாவட்ட தலைவர் சேட்டு (எ) ரங்கநாதன், வன்னியர் சங்க மாவட்ட துணை தலைவர் சிங்காரவேலு, ஒன்றிய செயலாளர் வேல்முருகன், ஏழுமலை, ஊராட்சி தலைவர் ஜெயசங்கர், விவசாய அணி தலைவர் தேசிங்கு, அவலூர்பேட்டையில் நகர செயலாளர் ஜான், மாவட்ட குழு உறுப்பினர் முருகன், ஒன்றிய தலைவர் சின்னபையன், இளைஞரணி செயலாளர் சிங்காரம் ஆகிய 10 பேரை போலீசார் கைது செய்தனர். செஞ்சி, கஞ்சனூர், கெடார், ஆனந்தபுரம், சத்தியமங்கலம், நல்லாண்பிள்ளைபெற்றாள் ஆகிய பகுதிகளை சேர்ந்த பாமக நிர்வாகிகள் 17 பேரை போலீசார் கைது செய்தனர். இதுபோல் மாவட்டம் முழுவதும் 88 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

**வாணியாறு அணை திறப்பு 10,517 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்**

பாப்பிரெட்டிப்பட்டி, : பாப்பிரெட்டிப்பட்டி வாணியாறு அணை பாசனத்திற்காக திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 10,517 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் வாணியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து தமிழக முதல்வர் உத்தரவின்படி, ஆயக்கட்டுதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க நேற்று வாணியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

நிகழ்ச்சியில் தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் கலந்து கொண்டு, தண்ணீரை திறந்து வைத்து மலர் தூவினார். அதிமுக மாவட்ட செயலாளர் கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் அன்பழகன், டி.ஆர்.ஓ., ராமர், பாப்பிரெட்டிப்பட்டி சேர்மன் முருகன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், வட்டாட்சியர் மாறன், கோட்டாட்சியர் காமராஜ், செயற்பொறியாளர் ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர் பாலசுப்ரமணியம், உதவி பொறியாளர் கிருபா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:

வாணியாறு நீர்த்தேக்கத்தின் தற்போதைய நீர் இருப்பை கொண்டு புதிய ஆயக்கட்டு பகுதியான வலதுபுற கால்வாயில் வினாடிக்கு 50 கனஅடி வீதமும், இடதுபுற கால்வாயில் வினாடிக்கு 45 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு இடது மற்றும் வலது புறக்கால்வாய்களில் ஒவ்வொரு கால்வாயிலும் இரண்டு மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் 5 நாட்கள் வீதம் 40 நாட்களுக்கு ஒரு நனைப்பு தண்ணீர் திறந்து விடப்படும்.

5 நாட்கள் இடைவெளி விட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் 5 நாட்கள் வீதம் 10 நாட்களுக்கு இரண்டாவது நனைப்பும், 5 நாட்கள் இடைவெளி விட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் 5 நாட்கள் வீதம் 10 நாட்களுக்கு 3வது நனைப்பும், 5 நாட்கள் இடைவெளி விட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் 3 நாட்கள் வீதம் 6 நாட்களுக்கு 4வது நனைப்பும், 51 நாட்களுக்கு சுழற்சி முறையில் தண்ணீர் வழங்கப்படும். பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதிகளான வெங்கடசமுத்திரம் ஏரி, ஆலாபுரம் ஏரி நிரம்பியது போக மீதமுள்ள உபரி நீர் பறையப்பட்டி, ஒந்தியாம்பட்டி, தென்கரைக்கோட்டை ஆகிய ஏரிகளுக்கு திறந்து விடப்படும்.

இதன் மூலம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் உள்ள மோளையானூர், கோழிமேக்கானூர், பாப்பிரெட்டிப்பட்டி, அதிகாரப்பட்டி, அலமேலுபுரம், தாதம்பட்டி, ஆலாபுரம், மருக்காலம்பட்டி, ஒந்தியாம்பட்டி, கவுண்டம்பட்டி, புதுப்பட்டி, வெங்கடசமுத்திரம், தேவராஜபாளையம், மெணசி, பூதநத்தம், தென்கரைக்கோட்டை, ஜம்மனஹள்ளி, பறையப்பட்டி புதூர், நாச்சினாம்பட்டி மற்றும் சின்னாங்குப்பம் ஆகிய 20 கிராமங்களில் 10,517 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே, விவசாய பொதுமக்கள், பொதுப்பணித்துறையினருடன் ஒத்துழைத்து நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.